# திருமலைத்தீபம்
Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் - 42
விலை ரூபாய் 20.00

தீபம்-42
ஆவணி இதழ்-2017 ,ஆரம்பம் 15 மாசி-2013.



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


## ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர் (தி. பா 103 : 08)

## ஆயரின் செய்தி



**மரியன்னையின் விண்ணேற்பு மாதத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்!**

யூலை மாதம் 29ம் திகதி வெல்வெரி தூய யாகப்பர் ஆலயத்தில் எமது மறைமாவட்ட குடும்ப ஒன்றுகூடல் நடைபெற்றது. திருவிழா திருப்பலி, ஒன்றுகூடல், விளையாட்டு எனப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தவர்களுக்கும் வருகை தந்து பங்கேற்றவர்களுக்கும் எமது பாராட்டுக்கள். ஆவணிமாதம் என்றாலே தூய அன்னையின் விண்ணேற்புப் பெருவிழா நினைவிற்கு வரும். அதிலும் எமது மறைமாவட்டத்தில் தூய மரியாள் பேராலயப் பெருவிழா சிறப்பம்சமாக அமைந்து விடும்.

மீட்புச் சரித்திரத்தில் மிக முக்கிய பங்காற்ற அழைப்புப் பெற்றவர் அன்னை மரியா. இயேசுவை வயிற்றில் தாங்கி, இவ்வுலகிற்குக் கொடுப்பது அவரது பணியாக இருந்தது. மரியா எப்போதும் தெய்வபக்தியும் பயமும் கொண்ட யூதப் பெண்ணாக வாழ்ந்தவர். இவரது பெற்றோர் சுவக்கீன், அன்னம்மாள் தமது தூய, நம்பிக்கை நிறைந்த வாழ்வால் மரியாவை விசுவாச வாழ்வில் பக்குவப்படுத்தியிருப்பார்கள். மரியா கடவுளால் முன்குறித்து வைக்கப்பட்டவர். எனவே மரியாவை பாவமாசற்றவராக பிறக்கச் செய்தார். மரியாவும் 1858ம் ஆண்டு பேர்ணடேற் எனும் சிறுமிக்கு லூர்து நகரில் காட்சி கொடுத்தபோது "நாமே அமல உற்பவம்" என்று தன்னை வெளிப்படுத்தினார். எனவே மரியாவின் அழைப்பும் இறைவன் மரியாவை இப்பணிக்காக தயார் செய்ததும் தெளிவாகின்றது. மரியாவினது அழைப்பின் இன்னுமொரு விசேட சம்பவமாக அவரது விண்ணேற்பு அமைகின்றது. "மரியா தனது உலகவாழ்வின் முடிவில் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார்" என்று திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1956ம் ஆண்டு நவம்பர் 1ம் நாள் திருச்சபையின் வேதசத்தியமாகப் பிரகடனப்படுத்தினார். ஒருவிடயத்தை வேதசத்தியமாக பிரகடனப்படுத்துவதென்பது திடீரென மேற்கொள்ளப்படும் ஒரு முடிவல்ல. பலவருடங்களாக நடைபெற்ற ஆய்வுகள், தேடல்கள், விசுவாச சான்றுகள், செபம், கலந்துரையாடல்கள், ஆலோசனைகளின் விளைவாகவே இது போன்ற விசுவாச சத்தியம் பிரகடனப்படுத்தப்படுகின்றது. மரியன்னையின் விண்ணேற்பும் எமக்கும் நம்பிக்கையைத் தருகின்றது. விண்ணேற்படைந்த மரியா எமக்காக எப்போதும் பரிந்து பேசுகின்றார். சரித்திரத்தில் பலருக்கு, பல இடங்களில் காட்சி தந்து செபிக்கவும் மனம்மாறவும் அழைப்புகள் விடுத்துள்ளார். நம்பிக்கையோடு அவரிடம் செபிப்போம். அவர் வாழ்ந்த நம்பிக்கை நிறைந்தவாழ்வை நாமும் வாழ்ந்து காட்டுவோம்.

**யூபிலி ஆண்டு:**

இம்மாதம் 25ம் திகதி எமது மறைமாவட்டம் புதிய மறைமாவட்டமாக உருவாகியதிலிருந்து (1893) 124 ஆண்டுகளை நிறைவு செய்கின்றது. எனவே அன்றைய தினம் தூய மரியாள் பேராலயத்தில்.....

தொடர்ச்சி 02ம் பக்கத்தில்.....

## இயேசுவோடு 12 மணி நேரம்
## விசேட நற்கருணை ஆராதனை

இடம் : தூய குவாடலூப்பே அன்னை திருத்தலம்
காலம் : 09 செப்டெம்பர் 2017 சனிக்கிழமை
நேரம் : மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை



**திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.**

## திருமறைக்கல்வி நிலையத்தில் விற்பனைக்குண்டு



**விலை ரூபா 250/-**

தரம் 10, 11 இற்கான வினாவிடைகளும் மாதிரி வினாத்தாள்களும் அடங்கிய புத்தகம் விற்பனைக்குண்டு. திருமறைக்கல்வி நடுநிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## அருட்பணியாளரின் துறவற நினைவும் புதிய உதவிப்பங்குத் தந்தையின் வருகையும்







03 பக்கத்தில் ....

## சாம்பல்தீவு கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய சந்திப்பு









03 பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது வலிமையாகிய கடவுளை மகிழ்ந்து பாடுங்கள் (தி. பா. 81 : 1)

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

புதிய மாதம் புலர்ந்துவிட்டது மீண்டும் உங்களோடு பேசுவதற்கு
எனக்கு ஒரு வாய்ப்பு பெருமகிழ்வே!

இம்மாதம் ஆறாம் திகதி இயேசுவின் உருமாற்ற விழாவைக் கொண்டாடுகிறோம். இயேசுவின் உருமாற்றமானது நமது வாழ்விலே மனமாற்றங்களை ஏற்படுத்தும் பொற்காலமாக அமைய வேண்டும். மேலும் பதினைந்தாம் திகதி அன்னை மரியாளின் வாழ்வின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நிறைவான நிலைகளைக் கண்டடைய முனைவோம். அதேவேளை மடுத்திருத்தலப் பெருவிழாவுமாகும். அன்னை மரியாளின் ஆசி வேண்டிச் செல்லும் பக்தர்களுக்காக இறைவனிடம் வேண்டுவோம். இம்மாதம் இருபத்தைந்திலே 124 ஜூபிலி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்ட்டு கொண்டாடப்படவுள்ளது ஒரு சிறப்பு நிகழ்வாகும்.

இம்மாதத்திலே கும்புறுப்பிட்டி பிரான்சிஸ் சேவியர் ஆலயம், மரியாள் ஆலயம், பள்ளத்தோட்டம் தூய வேளாங்கன்னி ஆலயம். மூதூர் சகா~யபுரம் தூய வேளாங்கன்னி ஆலயம், புடவைக்கட்டு தூய செபஸ்தியார் ஆலயம், அன்புவழிபுரம் தூய சதாசகாய மாதா ஆலயம், கந்தளாவ தூய சதாசகாய மாதா ஆலயம் இவற்றில் இறைமக்கள் தங்கள் ஆலயத்திருவிழாக்களைக் கொண்டாடுகின்றார்கள். இ வ ர் க ள் அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்.

இம்மாதத்தின் சிறப்புக்களில் இன்னுமொன்று அருட்பணியாளர்கள் டன்ஸ்ரன் பிறட்ரிக், ஜே. அனிஸ்ரன் மொறாயஸ்.இ.ச, போல் றொபின்சன், ஜூட் ஜோன்சன், சுகுனேந்திரன் குரூஸ், எல். பிலிப். மதுராங்கன் குரூஸ் இவர்கள் தமது குருத்துவ அபிஷேக நாளை நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றார்கள். தொடர்ந்தும் இவர்களின் பணிவாழ்வு சிறப்புற இறைவனை வேண்டுவோம்.

அதேவேளை மறைமாவட்டத்திலே பணிபுரிந்து இறைபதம் அடைந்த அருட்பணி றேமன் அரசரெட்ணம், அருட்பணி இயூஜின் ஹேர்பட், அருட்பணி எட்வின் அ.ம.தி இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுவோம். இம்மாதம் ஆறாம் திகதி உலக சமாதான தினமாகும். இன்று நாடுகளுக்குள் போர் அச்சுறுத்தல்கள், தீவிர தாக்குதல்கள். தற்கொலைத்தாக்குதல்கள் என அமைதி சிதைவுறுவதையும் அவதானிக்க முடிகின்றது. எனினும் தொடர்ந்து செல்லும் இந்நிலைகள் மாறி மறைந்து உலகளாவிய நிலைகளிலே அமைதி, சமாதானம் நிலைபெற இறைவனே துணைபுரிய வேண்டுமென்று வேண்டி நிற்போம்.

நாட்டின் அரசியலிலும் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. மாறுபட்ட சிந்தனைகளும். செயற்பாடுகளும் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்வதால் நியாயமான தீர்வுகளைக் கண்டடைவதில் பெரும் தடைகள் வந்த வண்ணமாய் உள்ளன. எப்படியும் நீதியான வழிமுறைகளை அழிய விடாமல் காத்து நாட்டை அமைதியின்பால் இட்டுச்செல்ல நல்லுள்ளங்கள் ஒன்றுபட வேண்டி நிற்போம்.

உள்ளங்களிலே நல்லெண்ணங்கள் உதயமாகி நல்லவைகளால் நாடுவளம் பெற வேண்டிக் கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கிறேன்.

1ம் பக்கத் தொடர்ச்சி....... ஆயரின் செய்தி

நடைபெறவிருக்கும் விசேட திருப்பலியின்போது யூபிலி ஆண்டை நாம் பிரகடனப்படுத்தவுள்ளோம். 124 ஆண்டுகள் கடந்த நிலையில் இக்காலத்தில் எம்மை தமது போதனையாலும் சாட்சியம் நிறைந்த வாழ்வாலும் விசுவாசத்தில் வழிநடத்திய மிஷனரி, குருக்கள், ஆயர்கள், மறைமாவட்ட, துறவறகுருக்கள், பொதுநிலைவிசுவாசிகள் அனைவரையும் நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுவோம். யூபிலி ஆண்டை மையப்படுத்தி வரக்கூடிய நிகழ்ச்சிகளிலும் நாம் ஆர்வத்தோடு பங்குபற்றி பயனடைவோம்.

இது விடுமுறைகாலம். பாடசாலை விடுமுறை மட்டுமல்ல வெளிநாடுகளில் வாழும் எம்மவர்கள் விடுமுறையில் சிலவாரங்கள் இலங்கையில் கழிக்கவரும் காலமுமாகும். இந்நாட்கள் குடும்ப, நட்பு ஒன்றுகூடலின் காலமாக அமைய வாழ்த்துகின்றோம்.

அதேவேளை க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும் புலமைப்பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும் தமது அறிவையும் ஆற்றலையும் பரீட்சிக்கும் காலமாகும். இம்மாணவர்கள் தமது பரீட்சையை திறம்பட எழுதவேண்டிய ஞானத்தை இறைவன் கொடுத்து வழிநடத்த வேண்டுமென எமது நாளாந்த செபங்களில் இவர்களை நினைவுகூர்வோம். எமது ஆசீரும் செபமும் இவர்களுக்கு எப்போதும் உண்டு. இம்மாணவர்களை அர்ப்பணிப்போடு ஆயத்தம் செய்த ஆசிரியர்கள் பெற்றோரையும் நாம் பாராட்டுகின்றோம்.

எமது மறைமாவட்டம் ஆன்மீகத்தில் மேலும் வளர செபிப்போம், பங்கேற்போம், பங்களிப்போம்.

இறைவனின் ஆசீரும், மரியன்னையின் பரிந்து பேசுதலும் எப்போதும் உங்களோடு இருக்க வாழ்த்துகின்றேன்.

கிறிஸ்துவின் அன்பில்,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

## பரிசுத்த தாய் மாமரித்தாய்

உனக்கும் எனக்கும் தாய் ~ அது
மாமரித்தாய் மண்ணுலகின் தாய்
மாமரியை முன்மாதிரியாய் ஏற்று வாழ்ந்து விடு
மீண்டும் வாழ்வடைவாய் வாழ்வினிலே

பிரிவினை அகற்றிவிடு பிரிந்த சபை என்று கூறி
பிரிந்து நீயும் செல்லாதே
நீ உதிர்க்கும் வார்த்தைகள் உன் உதடு வந்து சேர்வதில்லை.
ஆனால் அது செவிகளை வந்து சேர்ந்து விடும் மறவாதே
வாய்ப்பு கிடைத்ததென்று வாய்க்கு வந்ததையும் கூறுகின்றாய்
கர்த்தரைத் தொலைத்த தாய்
என்னை எப்படி வழிநடத்திடுவாள் என்கின்றாய்
கடவுளின் திட்டம் அறிந்தவனா – நீ
சீடரைப் பெருமைப்படுத்துகின்றாய்
சிராட்டி வளர்த்த தாயை வெறுக்கின்றாய்
தாயின்றிப் பிறந்தவனா – நீ
உயிரளிப்பவர் உன்னதராய் இருந்தாலும்
தாயின் கருவறையின்றி மனிதனாய்
தரணியில் யாரும் பிறந்ததில்லை மறவாதே மானிடனே

உன்னதரை உடனிருந்து வழிநடத்திய தாய்
உன்னையும் வழிநடத்திடுவாள் மறவாதே
விண்ணுக்கும் மண்ணுக்கும் தாய்
அன்றும் என்றும் இன்றும் ஒரே தாய்
பரிசுத்த தாய் மாமரித்தாய் மண்ணுலகின் தாய்



ஆக்கம் : சு. கௌசல்யா
இல – 216/12
பாலையூற்று.

## ஞானோதயம் - அக்குவானஸ் பல்கலைகல்லூரியுடன் இணைக்கப்பட்டது

இலங்கையில் 170 வருடங்களாக பல்வேறுபட்ட பணிகளை ஆற்றிவரும் அமலமரித்தியாகிகள், மாணவர்களின் ஆரம்ப, இடைநிலைக் கல்வி விருத்தியில் நீண்ட காலமாகப் பணியாற்றிவருவது யாவரும் அறிந்ததே. தற்பொழுது, உயர் கல்வியின் முக்கியத்துவத்தை தெரிந்துகொண்ட வடமாகாண அமலமரித்தியாகிகள் மன்னாரில் இயங்கிவரும் "ஞானோதயம்" எனும் அமலமரித்தியாகிகளின் ஆன்மீகக் கல்வி மையத்தை கொழும்பு அக்குவானஸ் பல்கலைகல்லூரியுடன் இணைந்த ஒரு உயர் கல்வி நிறுவனமாக தரம் உயர்த்தி உள்ளார்கள்.

இத் 'தரமுயர்த்தல்' நிகழ்வு கடந்த 11 ~ 07 ~ 2017 அன்று கொழும்பு பேராயர் இல்லத்தில் இடம்பெற்றது. கொழும்பு பேராயர் அதிவந்தனைக்குரிய மல்கம் காடினல் றஞ்சித் ஆண்டகையும், அமலமரித்தியாகிகளின் வடமானில முதல்வர் அருட்கலாநிதி எட்வின் வசந்தராஜா, அ.ம.தி. அடிகளாரும் உத்தியோகபூர்வ ஒப்பந்தமொன்றில் கைசாத்திட்டு ஆங்கில டிப்ளோமா கற்கைநெறியை, ஆரம்பத்தில், அக்குவானஸ் பல்கலைகல்லூரியுடன் இணைந்து நாடாத்துவதற்கான அனுமதியை பெற்றிருக்கிறார்கள்.

இவ் அனுமதியை பயன்படுத்தி வடமாகாண அமலமரித்தியாகிகள் மன்னார் மாவட்டத்தில் மாத்திரமல்ல அவர்கள் தற்போது பணிபுரியும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோணமலை போன்ற ஏனைய மாவட்ட மாணவர்களின் நன்மைகருதி அம்மாவட்டங்களிலுள்ள தம் நிறுவனங்களில் மாணவர்களை இவ் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறிக்கு ஆயத்தப்படுத்தி மன்னார் ஞானோதயம் உயர்கல்வி நிறுவனம் மூலமாக அக்குவானஸ் பல்கலைகல்லூரியின் ஆங்கில டிப்ளோமாவிற்கான சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி உள்ளார்கள்.


இவ் ஆங்கில டிப்ளோமாவிற்கான வகுப்புக்கள் இவ்வருட க.பொ.த. உயர்தர பரீட்சைகள் முடிவடைந்த பின்பு புரட்டாதி மாத முற்பகுதியில் ஆரம்பமாகும். எதிர்காலத்தில் ஏனைய துறைசார்ந்த டிப்ளோமா மற்றும் இளநிலை பட்டப்படிப்பு கற்கைநெறிகளும் இவ் உயர்கல்வி நிறுவனத்தினால் கற்பிக்கப்படுவற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

[illegible] பக்கத்தில்......

# மாதம் ஒரு புதுமை



தூயடொன் பொஸ்கோ பணிவாழ்வில் பலதடவைகள் இரவு வேளைகளில் தனிமையில் பயணம் செய்ய வேண்டியிருந்தது. மக்கள் நடமாட்டம் இல்லாத கள்வனிடமிருந்து ஆபத்துகள் வரக்கூடிய சூழ்நிலைகள் இவை. ஒருநாள் அவரது பயணத்தின்போது திடீரென ஓர் பெரியநாய் தோன்றி அவருக்குக் பாதுகாப்பாக வந்தது. ஆபத்து குறைந்ததும் அது மறைந்துவிடும். சிலவேளைகளில் மாணவர் விடுதிக்கு வந்தால் மாணவர்களோடு மிகவும் சாதுவாகப் பழகும். பயணத்தின்போது திருடர்கள் அல்லது




காட்டு விலங்குகள் வந்தால் மிகவும் கொடூரமாக அவர்களைத் தாக்கி துரத்திவிடும். "கிறிஜியோ" எனஅழைக்கப்பட்ட இந்த நாய் எங்கிருந்து வந்தது, எங்கு சென்றது பற்றி புதிராகவே உள்ளது.

## குட்டிக்கதை

Fr .Nc

ஒரு பெரிய திருவிழா நடந்துகொண்டிருந்தது. அது நற்கருணை கொடுக்கும் நேரம். பல குருக்கள் நற்கருணை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு குருவானவர் நற்கருணை கொடுக்கும் போது ஒரு இளம்பெண் நற்கருணை பெறுகிறார். அவர் நின்று பெற்ற விதம் வித்தியாசமாயிருந்தது. குரு திடீரென்று அந்தப்பெண்ணின் பக்கம் திரும்பிப் பார்க்கிறார். அந்தப்பெண் நாக்கிலிருந்து நற்கருணையை எடுத்து கீழே மண்ணிலே வீசிவிடுகிறார்.

அந்தப்பெண் வேறு சமயத்தைச் சேர்ந்தவர் என்பதைக் குருவானவர் தெரிந்து கொண்டார். நம்பிக்கையே எல்லாவற்றிலும் பெரிதென்பது உண்மைதானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று சொற்போட்டி

Fr NC

01. முக்காலம் :............................ :............................ :............................
02. முத்தமிழ் :............................ :............................ :............................
03. மும்மலம் :............................ :............................ :............................
04. முத்தொழில்:............................ :............................ :............................
05. மூவரசர் :............................ :............................ :............................
06. இயேசுவைக் காணச்சென்ற மூன்று ஞானிகள்
:............................ :............................ :............................
07. முச்சங்கம் :............................ :............................ :............................
08. மும்முரசு :............................ :............................ :............................
09. முக்குற்றம் :............................ :............................ :............................
10. முப்பிணிகள்:............................ :............................ :............................

☞ எல்லோரும் பங்கு கொள்ளலாம்
☞ எல்லோரும் சரியாக எழுதினால்
☞ குலுக்கல் மூலம் தெரிவு

- ❖ 1ம் பரிசு 500/-
- ❖ 2ம் பரிசு 300/-
- ❖ 3ம் பரிசு 200/-

முடிவுத்திகதி : 25.09.2017

**1ம் பக்கத் தொடர்ச்சி......... அருட்பணியாளரின் குருத்துவ நினைவும்.......**

பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் கடந்த 30.07.2017 சுதேச குருக்களின் தினமன்று காலை 7.00 மணி திருப்பலியில் அருட்பணி ஒல்பன் ராஜசிங்கம் (அ.ம.தி) அடிகளா~ரின் 50வது துறவற பொன் விழாவை சிறப்பித்ததுடன், பாலையூற்றில் புதிய உதவிப்பங்குத்தந்தையாக வருகை தந்திருந்த அருட்பணி ஜெரி குயின்டஸ் (கப்புச்சின்) அடிக~ளாரை அன்புடன் வரவேற்கும் நிகழ்வும் நடைபெற்றது. அன்றைய தினம் அடிகளாருடன் இணைந்து அருட்பணி அலெக்ஸ் செல்லையா (கப்புச்சின்), அருட்பணி யோகராஜா (அ.ம.தி), பங்குத்தந்தை அருட்பணி மதுராங்கன் குரூஸ் ஆகியோர் இணைந்து திருப்பலியினை ஒப்புக் கொடுத்தார்கள். மேலும் திருப்பலி நிறைவில் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கேக் வெட்டி அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

தகவல் : திருமதி. A. சகாயமேரி

**01ம் பக்கத் தொடர்ச்சி............ சாம்பல்தீவு கத்தோலிக்க சாம்பல்தீவு........**

ஆடி மாதம் ஞாயிறு 16.7.2017 அன்று காலை சாம்பல்தீவு பங்கிலுள்ள சிலுவைமலை ஆலயத்தில் திருகோணமலை மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் இயக்குனர். அருட்பணி. ரொஹான் பேர்ணாட் அடிகளாருடன், தலைவர் ~ பம்பஸ்டன், செயலாளர் ~ நோயல் ராஜா, மற்றும் முன்னால் செயலாளர் ஹரிகரன் ஆகியோர் சென்று புதிதாய் இணைந்து கொண்ட சாம்பல்தீவு பங்கு கத்தோலிக்க இளையோரை தரிசித்து ஊக்கப்படுத்தியதோடு,அறிவுரையும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தகவல் ~ நோயல் ராஜா

## பாலையூற்று தூய லூர்து அன்னை கெபி நுழைவாயில் திறப்பு விழா

பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் 1906ம் ஆண்டு முதல் இன்று வரை மரியன்னையின் வழியாக பக்தர்கள் பெற்றுக் கொண்ட நன்மைகளுக்கு நன்றி கூறும் விதமாக 16.07.2017 அன்று மாலை ஞாயிறு திருப்பலி நிறைவில் இறைமக்களின் சமூகத்துடன் அருட்பணி அன்ரு ஸ்டீபன் அடிகளாரின் தலைமையில் "ஆண்டவரின் ஆசீர் பெற்றவரே வருக" என்று பொறிக்கப்பட்ட தூபி திறந்து வைக்கப்பட்டு பங்குமக்கள் அனைவரும் மெழுகுதிரி ஏந்தியவர்களாக மங்கள வார்த்தைச் செபத்தைச் சொல்லி மரியன்னையின் பதியில் தங்களை ஒப்புக் கொடுத்து இறையாசியைப் பெற்றுக் கொண்டார்கள். இதற்கு ஒத்துழைப்பு, உதவி செய்த உள்நாட்டு, வெளிநாட்டு இறைமக்களுக்கு மனமார்ந்த நன்றிகள் கூறப்பட்டது.

தகவல் : திருமதி. A. சகாயமேரி

தொடர் ~ 06

## நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்



சிறந்த தொடர்பாளர்



**அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)**

பல்வேறு துறையில் பணிபுரியும் ஏனைய ஊழியர்களை விட ஆசிரியர் சிறந்த தொடர்பாடல் திறன் உடையவராக இருக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது. நினைப்பது போல இது இலகுவான காரியமல்ல. மாணவர்களது மொழிப் பிரயோகங்களை ஆசிரியர் நன்கு அறிந்திருக்க வேண்டும். ஆனால் ஆசிரியர் பேசும் முறை, தொனி வித்தியாசமாக அமைந்திருக்கும். வருடாந்த இடமாற்றத்தினூடாக ஆசிரியர்கள் வெவ்வேறு பிரதேச பாடசாலைகளுக்கு செல்லுகின்ற போது புதிய பாட~சாலை மாணவர்களது மொழி வழக்கை கற்றுக் கொள்வதற்கு சிறிதுகாலம் தேவைப்படும்.

சிறந்த தொடர்பாடல் திறனுடைய ஆசிரியர் மாணவர்களின் ஐம்புலன்களையும் சென்றடையக் கூடியவாறு தன்னைத் தொடர்புபடுத்துவார். ஒவ்வொரு மாணவருக்கும் கேட்கக் கூடியவாறு பேசுவதோடு, செவிகளுக்கு மட்டுமல்ல மனக்கதவுகளுக்கு கேட்கக் கூடியவாறு பேசவேண்டும். இவ் விடயத்தில்தான் ஆசிரியருக்கு பிள்ளை உளவியல் பற்றிய அறிவும், பிள்ளைகளின் தற்காலவிருப்பு, வெறுப்புக்களை பற்றிய தெளிவும் முக்கியமானதாகும்.

கிரிக்கட் விளையாட்டு மாணவர்கள் எல்லோரினதும் விருப்பை கவர்ந்ததொன்றாகும். இவ் விளையாட்டில் எவ்வாறு புள்ளிகள், வீதங்கள் தீர்மானிக்கப்படுகின்றன என்பது பற்றிய வகுப்பறை கணிப்பீட்டு பாடம் மாணவர்களின் ஆர்வத்தை தூண்டக் கூடியதாக அமையக் கூடும். சுனாமி எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்த ஒரு நிகழ்வு. சுனாமி எச்சரிக்கைகள் அடிக்கடி விடப்பட்டுக் கொண்டிருப்பதுண்டு. கடலுக்கடியில் ஏற்படக்கூடிய நிலநடுக்கம், சுனாமிப் பேரலை, அடிக்கடி பாதிக்கப்படும் நாடுகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கிய புவியல் பாடவேளை மாணவர்களுக்கு சுவாரசி~யமாக அமையக் கூடும். மொழி கற்பிக்கும் ஆசிரியர் மேடைப்பேச்சு எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றிய நுணுக்கங்களை மாணவர்கள் மூலமே வகுப்பறையில் செய்து காட்டலாம். எல்லாப்பாட ஆசிரியர்களும் தங்கள் தங்கள் பாடங்களை சுவாரசியமாக கற்பிக்க கூடிய பல வழிமுறைகளில் கவனம் செலுத்தலாம். இவை மட்டும் போதுமானது என கூறிவிடமுடியாது. ஆசிரியரின் ஒவ்வொரு செயற்பாடும் மாணவரினது இதயக்கதவை தட்டுபவையாக அமைய வேண்டும். இது சாத்தியமாக வேண்டுமானால் ஒவ்வொரு ஆசிரியரும் தனது பாடத்துறையில் ஆர்வமாக இருத்தல் வேண்டும். அத்தோடு அதே ஆர்வத்தை மாணவர்களுக்கு ஊட்ட சகலவிதமான முயற்சிகளையும், உத்திகளையும் மேற் கொள்ளல் வேண்டும். தனது பாடத்தில் பாண்டித்தியம் பெற்றிருப்பது மட்டுமல்ல அதை எவ்வாறு மாணவரைக் கவரும் விதத்தில் கொடுக்கமுடியும் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும்.

வருடாந்த சுற்றுலாவுக்கு அப்பால் பாட சம்பந்தமான களப் பயணங்கள், குதூகலப் பயணங்கள் போன்றவை பாடம்சார் அறிவை மட்டுமல்ல சமூக இடைத்தொடர்பை அதிகரிப்பதோடு ஆசிரிய ~ மாணவ உறவையும் பலப்படுத்தும் வழிமுறைகளாக அமையும். ஆசிரியரில் மாணவருக்கு ஏற்படும் நெருக்கம் அவர் கற்பிக்கும் பாடத்திலும் மாணவரின் ஈடுபாட்டை அதிகரிக்க வாய்ப்பளிக்கும். இவை அனைத்தும் ஆசிரியரால் உருவாக்கப்படும் கற்றல் சந்தர்ப்பங்களாக அமையும். ஒவ்வொரு ஆசிரியரும் தனது அறிவு, அனுபவம், ஆளுமைபாடத்துறையின் மேல் உள்ளஆர்வம், மாணவரின் நலனில் கொண்டுள்ள அக்கறை, சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்ற அர்ப்பணிப்பு என்பவற்றிற்கேற்ப வித்தியாசமான கற்றல் சூழலை ஏற்படுத்துபவராகவும், கற்றல் சந்தர்ப்பங்களை வழங்குபவராகவும் திகழ்வார். கற்றல் குறிக்கோள்களை மாணவர் அடைந்துகொள்ள இவை எல்லாம் உறுதுணையாக அமையும்.

தொடரும் .......

## மறைமாவட்ட குடும்ப வாழ்வுப்பணியகத்தால் நடாத்தப்பட்ட குடும்ப மேம்பாட்டுக் கருத்தமர்வுகள்

பங்குகள் ~ 1 ~ தூய சூசையப்பர் ஆலயம், நிலாவெளி (01.05.2017)

2 ~ தூய அந்தோனியார் ஆலயம், மூதூர் (24.06.2017)

3 ~ குழந்தை இயேசு ஆலயம், உவர்மலை (01.07.2017)

பங்குத்தந்தையர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட குடும்பங்களுக்கான ஒன்றுகூடல்கள் மறைமாவட்ட குடும்ப வாழ்வுப்பணி இயக்குனர் அருட்பணி H. ஜூட் ஜோன்சன் தலைமையில் இடம்பெற்றது. திருமணம் என்பது **இறைவனின் திட்டம், திருமணம் அன்பின் அழைப்பு, குடும்ப ஆன்மீகம், பெற்றோரின் பொறுப்பு, நவீன காலத்தில் குடும்பங்கள், குடும்ப வாழ்வை சீரழிக்கும் கவனச்சிதறல்கள்** முதலான எண்ணக்கருக்களின் அடிப்படையில் கருத்துரைகளும், கலந்துரையாடல்களும், அனுபவப் பகிர்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மனைவியை எங்குமே
விட்டுக்கொடுக்காத ~ கணவன்
கணவனிடத்தில் எதையுமே
மறைத்துக் கொள்ளாத ~ மனைவி
நல்ல சிநேகிதர்களைப்
போன்று இருக்கும் ~ பிள்ளைகள்
இவையாவும் அமைந்தாலே
இல்லத்தில் குதூகலமே

பெரியதா ஒரு சண்டை
But குட்டியா ஒரு Sorry
சின்னதா ஒரு கோபம்
But செல்லமா ஒரு புன்னகை
கொடுமையா ஒரு பிரிவு
But இனிமையா ஒரு சேர்வு
இதுதாங்க இல்லறம்

குடும்பம் ஒரு கதம்பம்
பல எண்ணம், பல வண்ணம்

திருமதி. சிந்துஜா லெப்பன்
குடும்ப வாழ்வுப் பணியகம்...

## வன்முறைகள் வேண்டாமே ........

Fr .Nc

- ❖ கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்
- ❖ சிறியதாளில் வடிவமைத்தால் போட்டிக்குச் சேர்க்கப்படமாட்டாது

இதோ கவிதை வரிகள்

வன்முறைகள் பெருகுவதால்
ஆறுதல் நிலைகளை அனைவரும் காண்போம்
துன்பங்களே விளைவுகளாகும்
அமைதிகள் நிறைந்த வாழ்வு தோன்றுமே
படிக்கும் மாணவர்கள் சிறுபிள்ளைகள்
வல்லுறவுக்குட்படுத்தி அவர்களை
கொல்லும் நிலைகள் பெருகியவை
கொடுமைகளாகத் தெரிகிறதே
வேண்டவே வேண்டாம் இந்த அழிவுகள்
வேரோடு இதனை அழிக்கும்போதே

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-

முடிவுத்திகதி : 25.09.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் பங்கின் முதல் குருவும். மண்ணின் மைந்தனும்

## அருட்தந்தை நிக்கலஸ் கிறிஸ்டியன் அருள்வரதன்

*16.09.1992 - 16.09.2017*



"ஆண்டவரோடு இணைந்திருப்பதில்
மகிழ்ச்சியடையுங்கள் "







தந்தை : அமரர் பஸ்தியான் நிக்கலஸ்
தாய் : அமரர் மனோன்மணி நிக்கலஸ்
சகோதரிகள் : 2பேர் மூத்த சகோதரிகள்
அருட்தந்தை மூன்றாவது பிள்ளை

### கல்வி

ஆரம்பக்கல்வி : தி / மூதூர் தூய அந்தோனியார் மகா வித்தியாலயம்
உயர்கல்வி : தி / மூதூர் முஸ்லீம் மகா வித்தியாலயம்
மெய்யியல், இறையியல் : கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
கண்டி, தேசிய குருமடம்

### பணிவாழ்வில் தடம்பதித்தவைகள்

அதி. வந்.ஆயர் யோ.கிங்ஸ்லி சுவாமிபிள்ளை ஆண்டகையால் திருகோணமலை மூதூர் தூய அந்தோனியார் ஆலயத்தில் 1992ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்படுத்தப்பட்டார்.

### பணிவாழ்வு

| | |
|---|---|
| 1992 | : மட்டக்களப்ப, இருதயபுரம் ~ உதவிப்பங்குத்தந்தை |
| 1993 ~ 1996 | : மட்டக்களப்பு, ஆயித்தியமலை ~ பங்குத்தந்தை |
| 1996 ~ 2001 | : மட்டக்களப்பு, ~ செங்கலடி ~ பங்குத்தந்தை |
| 2001 ~ 2006 | : மட்டக்களப்பு, வீச்சுக்கல்முனை ~ பங்குத்தந்தை |
| 2006 / 08 மாதம்: | மட்டக்களப்பு, குருக்கள் மடம் ~ பங்குத்தந்தை |
| 2007 ~ 2012 | : மட்டக்களப்பு, + அமிர்தகழி பாலமீன்மடு ~ பங்குத்தந்தை |
| 2012 | : திருகோணமலை, கன்னியா ~ பங்குத்தந்தை |
| 2013 நவம்பர் | : திருமறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் |
| 2014 யூலை | : திருமலைத்தீப பத்திரிகையின் ஆசிரியர் |

மூதாரில் உருவான முதற்குருவே
வெள்ளிவிழா நாயகனே
வாழ்த்துகின்றோம் உம் பணிதனையே
ஈழமதில் இறைபணிக்காய்
ஈந்திட்ட பெற்றோரையும் வாழ்த்துகின்றோம்.

பாரினில் பல தடைகள் சவால்களை
கடந்து வந்த போதிலும்
உமது அயரா பணிக்காய் நின்
சேவைதனை வாழ்த்துகின்றோம்.

வாழ்வில் நேரத்தை என்றுமே
பொன்னாக கருதி சேவையாற்றுபவரே
என்றுமே இறைவனுக்கு பிரமாணிக்கமாய்
வாழ்ந்து மனித மாண்பினை மதிப்பவரே

ஏழைகளோடும் சிறார்களோடும் அன்புறவாடி
உம் பணிக்கு அழகைக் கொடுத்தவரே
கிறிஸ்துவின் பணியில் பயணம் தொடர
வாழ்த்துகின்றோம் மனதார போற்றுகின்றோம்.



**செபிப்போம்**

**வாழ்த்துவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் கடந்த மாத நிகழ்வுகள்

***களப்பயணம் :***

திருகோணமலை மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ வாழ்வு சமூகம் இயங்கும் பேராலயப் பங்கு, குவாடலூப்பேபங்கு, இறையிரக்க திருத்தலம், செல்வநாயகபுரப் பங்கு, உவர்மலைப் பங்கைச் சேர்ந்த 35 உறுப்பினர்கள் ,திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் ஆன்மீக இயக்குனர் அருட்பணி அனிஸ்ரன் மொறாயஸ் அடிகளாருடன் யூன் மாதம் 26ம் திகதி ஒருநாள் களப்பயணமாக மட்டக்களப்பு சென்றனர். மட்டக்களப்பில் காலை 8.30மணி தொடக்கம் மதியம் 3.30மணி வரை மன்றேசாதியான இல்லத்தில் அருட்பணி. போல் சற்குணநாயகம் ,அருட்பணி றொஸான் ,அருட்பணி லோறன்ஸ் ஆகியோர் கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் தோற்றம் , குழு வாழ்வின் அவசியம் ,புனித இஞ்ஞாசியாரின் வாழ்க்கை, தியானங்கள் தொடர்பாக புனித இஞ்ஞாசியாரின் வழிநடத்தல்கள் ,பங்குகளில் கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் தேவை போன்ற தலைப்புக்களில் தமது கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மறைமாவட்ட, மட்டக்களப்பு பிராந்திய கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் இரண்டு மறைமாவட்டங்களும் தமது பணிகள் பற்றி எடுத்துக் கூறியதுடன் தொடர்ந்து வரும் நாட்களில் செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் ,உலக கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் தொடர்புகள் பற்றியும் ஆராய்ந்தனர். பின்னர் மட்டக்களப்பு டச்பாரில் அமைந்துள்ள புனித இஞ்ஞாசியார் ஆலயத்தை பார்வையிட்டதுடன் அன்று மாலை திருகோணமலை திரும்பினர்.


சிரமதானம்

திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சிரமதான நிகழ்வானது உப்புவெளி திருச்சிலுவை கன்னியர் மடத்தில் யூலை மாதம் இடம்பெற்றது. இதில் பெருமளவான உறுப்பினர்கள் கலந்துகொண்டுபணிகளில் ஈடுபட்டனர்.

புகைப்படம் 12ம் பக்கத்தில்..........

## உறவின் உன்னதம்

வாடகை இல்லாத வீடு, தாயின் கருவறை
கட்டணம் இல்லாத கல்வி, தந்தையின் அறிவுரை.
பயமே இல்லா பயணம், அண்ணனின் கைவிரல்.
தினம் ஒரு குறும்படம், தாத்தா பாட்டி கதைகள்.
அளவே இல்லா சந்தோஷம், தங்கையின் அன்பு.
ஒளி இல்லா நிழல், மனைவியின் உறவு.
வெறுப்பே இல்லா பகை, சகோதரியின் சண்டை.
கவலையே தெரியாத நாட்கள் நண்பனின் விளையாட்டு.



ர. ஷதுர்சன்,
செல்வநாயகபுரம்

## கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு – 2017

கத்தோலிக்க மறைபாடசாலைகளில் பணியாற்றும் மறையாசிரியர்களுக்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வுக்கான விண்ணப்பப்படிவங்கள், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நாட்டின் அனைத்து பங்குகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மறைப்பாடசாலையின் முதல்வரான பங்குத் தந்தையினால் மட்டுமே இப்பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டும். தனிப்பட்ட ரீதியில் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதை அறியத் தருகிறோம்.

விண்ணப்பப்படிவங்கள் இதுவரை கிடைக்கப்பெறாத அல்லது விண்ணப்பப்படிவங்கள் போதுமானதாக இல்லாத மறைபாடசாலை முதல்வர்கள், கீழ்காணும் முகவரிக்கு அலுவலக நேரங்களில் வந்து அல்லது தமது பங்கிற்கு தேவையான விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு தபால் மூலமாக அல்லது கீழ்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும். முகவரி:~ பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு.

தொலைபேசி எண். 011~2785230 ∴ 011~2177075

நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பங்கு ரீதியாக 24.08.2017 க்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

அருட்பணி பியல் ஜானக்க
தேசிய மறைக்கல்வி இயக்குனர்.

## டெங்குப்புகை

க15 வயதிலான சிறு பையன்கள் ஐவர் ஒரு வீட்டுத்திண்ணை அறையில் புகையூதிக் கொண்டிருந்தனர். அந்த அறை முழுவதும் புகை தான் அவ்வழியில் ஒரு வயதான ஐயா வந்தார். அவருக்கு கண் பார்வை சிறிது குறைவு. காதும் கேளாது. அவர் இப்பையன்களைக் கண்டதும் உள்ளே வந்து அமர்ந்து என்ன தம்பி டெங்கு நுளம்பிற்கு புகை அடிக்கிறீர்களா? நிறைய புகை, ஆனால் மணம் சற்று வித்தியாசமாக இருக்கிறது. நல்லது நல்லா அடியுங்க சமூக வேலைகளில் ஆர்வமுள்ள பிள்ளைகள் எனக்கூறினார்.

அந்நேரம் வாகனம் சத்தம் கேட்டது. இருவர் வெளியில் ஓடி வந்து பார்த்தார்கள். பொலிஸ் ஜீப். இவர்கள் வீட்டினுள் ஓடினார்கள். பொலிசும் ஓடிச்சென்று அவர்களைப் பிடித்து பொலிஸ் நிலையத்திற்குள் அழைத்துச் செல்ல ஆயத்தமானார்கள். அந்தப் பெரியவரும் ஏன் இவர்களைப் பிடிக்கிறீர்கள். டெங்கு நுளம்பிற்கு புகை அடிக்கிறார்கள் என்றார். பொலிசும் ஐயா! பெரியவரே இவர்களது சேவை இன்னுமொரு இடத்திற்கு தேவை அதுதான் கூட்டிச்செல்கிறோம் என்றனர். பொலிஸ் நிலையத்தில் அப்பையன்களுக்கு நல்ல அடி ஏனெனில் அவர்கள் அடித்தது டெங்கு புகையல்ல. "கஞ்சாப்புகை"

உவர்மலை
ஜோதி

# தூய யோசேப் வாஸ் ஆண்டு

- யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட தூய யோசேப் வாஸ் வன்னியூடாக புத்தளம் வந்தார். அங்கு பல கத்தோலிக்கர் பல ஆண்டுகளாக குருக்களின் பணி இல்லாமல் வாழ்ந்ததால் தூய யோசேப் வாஸ் புத்தளத்தில் தங்கி சில வாரங்கள் பணியாற்றினார்.
- புத்தளம் கண்டி இராச்சியத்திற்குட்பட்டதால் பணி செய்வதில் தடைகள் இருக்கவில்லை.
- ஆயினும் கண்டிக்குச் செல்வதே தூய யோசேப் வாசின் நோக்கம்.
- அந்தோனி யோசோத் தொமேயோர் எனும் போர்த்துக்கேயரின் துணையோடு தூய யோசேப் வாஸ் கண்டிக்குவந்தார்.



**சிறையில் இருந்ததால் பல நன்மைகளும் இருந்தன:**

1. சிங்கள மொழி கற்கக்கூடியதாக இருந்தது.
2. சிங்கள மொழி அகராதியையும் தயாரித்தார்.
3. தம் பணியாளன் யோன் என்பவருக்கு இலத்தீன் மொழி கற்றுக் கொடுத்தார்.
4. 1693ல் கோவாவிலிருந்து சபை முதல்வரிடமிருந்து இந்தியா திரும்பி வரும்படி கடிதம் வந்தது. கீழ்ப்படிவுள்ள தூய யோசேப் வாஸ் சென்றிருப்பார். ஆனால் இவர் இக்காலத்தில் சிறையில் இருந்ததால் இந்தியா செல்ல முடியவில்லை. இதுவும் இலங்கைக்கு நன்மையே.

- சமய வழிபாடுகளுக்குத் தடையிருக்கவில்லை. 1691ம் ஆண்டு முதன்முதலாக கண்டியில் கிறிஸ்மஸ் திருப்பலி ஒப்புக் கொடுத்தார்.

- ஆயினும் அரச மாளிகையில் பணியாற்றிய டெலா நெரோல் எனும் பிரெஞ்சுக்காரரின் சூழ்ச்சியால் யோசேப் வாஸ் ஓர் ஒற்றர் என சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.
- சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு தூய யோசேப் வாஸ் சிறையிலடைக்கப்பட்டது அவருக்கு ஏமாற்றமாகவும் பின்னடைவாகவும் இருந்தது.
- கண்டியில் மக்களுக்கு பெரும் பணியாற்ற வேண்டும் எனும் எதிர்பார்ப்போடு வாஸ் வந்திருந்தார்.
- அரசனின் நேரடியான கண்காணிப்பில் வாஸ் சிறையில் வைக்கப்பட்டார். ஆனாலும் வாஸ் ஒற்றரல்ல என்பதை அரசன் உணர்ந்து கட்டுப்பாடுகளை தளர்த்தினான்.



- **கண்டியில் வரட்சி**

  1696 கண்டியில் வரட்சி காரணமாக பெரும் பஞ்சம் வரக்கூடிய அபாயம் ஏற்பட்டது. வேறு மதங்களின் எந்த சடங்குகளும் பலிக்கவில்லை. அரசன் விமலதர்மசூரியன் மழைக்காக செபிக்கும்படி வேண்டுகோள் விடுத்தான்.

- **புதுமை:**

திறந்த வெளியில்பீடம் அமைக்கப்பட்டது. அங்குஓர் சிலுவையும் நாட்டில் வாஸ் அடிகள் செபிக்கத் தொடங்கினார். அவருடைய செபம், புனிதவாழ்வு, இயேசுவோடு கொண்டிருந்த ஒன்றிப்பின் காரணமாக மழைபொழியத் தொடங்கியது. இதனால் அரசனுக்கும் மக்களுக்கும் கத்தோலிக்க மதத்தின் மீது பெரும் மதிப்பு உயர்ந்தது. வாஸ் அடிகளும் சுதந்திரமாக தனது சமயப் பணி~ களைத் தொடர்ந்தார்.

## கண்டி இராச்சியத்தில் பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யோசேப் வாஸ்

**எமது நாட்டின் திருத்தூதரான தூய யோசேப்வாஸ் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை இன்று எம் நாட்டில் கத்தோலிக்க திருச்சபை நிலைத்து நிற்கின்றது என்றால் அதற்கு காரணம் தூய யோசேப் வாஸ் ஆவார். எனவே அவர் பற்றியும் அவரது பணி பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியது நமது கடமையாகும். இம்மாதம் அவரது பயணங்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வோம்.**

### 1. கோவாவில் இருந்து தூத்துக்குடி

கோவாவிலிருந்து இலங்கைக்கான பயணத்தை தூய யோசேப் வாஸ் கால்நடையாக ஆரம்பித்தார். கேரளா மாநிலத்தினூடாக தமிழ் நாட்டின் தென் எல்லைகளை அடைந்தார். அங்கே தூய பிரான்சிஸ் சவேரியார் பணிபுரிந்த பல கிராமங்களூடாக பயணித்து இறுதியில் தூத்துக்குடியை வந்தடைந்தார். அங்கு இலங்கைக்குப் பயணமாகும் வரை இயேசு சபைக் குருக்களோடு தங்கியிருந்தார்.

### 2. தூத்துக்குடியிலிருந்து மன்னார்

தூத்துக்குடியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், மன்னாருக்கும் அக்காலத்தில் வத்தை எனப்படும் ஓரளவு பெரிய படகு பொருட்களையும் மக்களையும் ஏற்றிச்செல்ல பயன்படுத்தப்பட்டது. சிறு தோணிகளில் தனிப்பட்ட மீனவர் பயணம் செய்தனர். எனினும் காற்று வீசும் திசையைப் பொறுத்து பயணம் திர்மானிக்கப்பட்டது. தூய யோசேப் வாஸ் தூத்துக்குடிக்கு வந்த போது காற்று வீசாததால் சிறிது காலம் இயேசு சபைக் குருக்களோடு தங்கியிருந்தார். பின்பு உதவியாளர் யோஹுடன் படகில் யாழ்ப்பாணம் நோக்கி பயணம் ஆரம்பமானது. எனினும் கடல் கொந்தளிப்புக் காரணமாக மன்னாரின் சவுத் பார் (South Bar) பகுதியில் தரையிறங்கினர். ஏறத்தாழ இருபது நாட்கள் கடலில் உணவும், நீரும் இல்லாமல் இப்பயணம் மிகவும் துன்பகரமாக அமைந்திருந்தது. ஆனாலும் இறைவனுடைய அருளால் கத்தோலிக்கர் வாழும் பகுதியில் இவர்கள் தரையிறங்கினர்.

### 3. மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம்

மன்னாரில் கடுமையான நீரிழப்புக்கும் வயிற்றோட்டத்துக்கும் ஆளான இருவரும் சிறிது நாட்கள் அருகே இருந்த பற்றைக் காடுகளில் அனாதரவாக விடப்பட்டனர். உடல்நலம் தேறிய பின் யாழ்ப்பாணம் நோக்கி இருவரும் பயணமாகினர். கரையோரமாக பயணம் செய்யாமல் அரிப்பு, அரவன்குளம், பறப்பான்கண்டல். கோயிற்குளம், இலுப்பைக்கடவை, கவுறுக்குளம், தம்பாட்டி, வெல்லாங்குளம், பல்லவராயன்கட்டு கிராமங்களூடாக பிச்சைக்காரர் போல இருவரும் சென்றனர். பூநகரிப் பகுதியை அடைந்து தோணி மூலம் கேரதீவிலிருந்து சங்குப்பிட்டியை அடைந்தனர். அங்கிருந்து மீண்டும் கிராமங்களூடாக யாழ்ப்பாணத்தை அடைந்தனர்.

பல தடவைகள் யாழ்ப்பாணத்திலிருந்து சில்லாலை, வலிகாமம், சங்கானை, தீவுப்பகுதிகள், தென்மராட்சி போன்ற பகுதிகளுக்கு இவர்கள் பயணம் செய்தனர். அவசர நிலைகளில் இரவிலும் பயணம் செய்தனர். பல இடங்களில் சிறு கோவில்களும் அடையாளமாக நடப்படும் சிலுவைகளும் புனிதரால் உருவாக்கப்பட்டன.

### 4. யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி, புத்தளம்

ஒல்லாந்தருடைய தேடுதலிலிருந்து தப்பிய தூய யோசேப் வாஸ் சில்லாலை, யாழ்ப்பாண மூப்பர்களின் ஆலோசனையின்படி கண்டி அரசனின் ஆளுகைக்குட்பட்ட வன்னிப் பிரதேசத்திற்கு செல்ல நேர்ந்தது. அதிகளவில் கத்தோலிக்கர் வாழ்ந்த புத்தளம் பிரதேசத்திற்கு புனிதர் சென்றார். புத்தளம், குருவிக்குளம், நாவற்காடு, மாம்புரி, தலவில், கற்பிட்டி (அரசடி), கட்டைக்காடு, போளவத்தை, ஆண்டியூர், சித்திரவெளி, முல்லைக்கண்டாவளை, பள்ளங்கண்டல், புளியங்குளம் போன்ற இடங்களை புனிதர் பல தடவைகள் நடந்து சென்று தரிசித்தார். அதேபோல சிறிது தொலைவிலிருந்த கண்டி இராச்சியத்திற்குட்பட்ட பல பகுதிகளுக்கு இரவில் சென்று வந்தார்.



### 5. புத்தளத்திலிருந்து கண்டி

மறைப்பணியின் மையத்தை செங்கடகல இராச்சியத்தின் தலைநகராகிய கண்டிக்கு கொண்ட செல்வது வினைத்திறன் மிக்கதாக அமையும் என்பதை உணர்ந்த தூய யோசேப் வாஸ் புத்தளத்திலிருந்து ஒரு போர்த்துக்கேய வியாபாரியுடன் கண்டி நோக்கிப் பயணமானார். பல இடங்களில் ஆறுகளைக் கடந்து இறுதியாக வாவுட நுழைவுப்பகுதிக்கு வந்துசேர்ந்தார். அங்கு கைது செய்யப்பட்ட புனிதர் சிறை வைக்கப்பட்டார்.

சிறிது காலத்தின் பின் வீட்டுக்காவலுக்கு மாற்றப்பட்ட புனிதர் பல தடவைகள் இரகசியமாக பயணம் செய்துள்ளார். மிகவும் அபாயகரமான இப்பயணங்களில் பலர் வழிகாட்டியாக இருந்துள்ளனர்.

### 5.கண்டியிலிருந்து கொழும்பு

அரசனுடைய அனுமதியில்லாமலும், அரச அனுமதி கிடைத்த பிறகும் தூய யோசேப் வாஸ் பல முறை கண்டி இராச்சியத்துக்கு வெளியே துணிவுடன் பயணம் செய்துள்ளார். நம்பிக்கையான வழிகாட்டிகளுடன் மிகவும் இரகசியமாக இப்பயணங்கள் நடந்தன. கொழும்பில் ஸ்லேவ் ஐலண்ட், மலிபன் வீதி, கொச்சிக்கடை, கடலான, கடவத்தை, களுத்துறை, அளுத்கம, கம்மல, கெந்தன்கமுவ, மல்வானை, மரியம்கம போன்ற இடங்களிலும் சீதாவாக்கை, இரத்தினபுரி, கொஸ்கம, அவிசாவெல, றுவான்வெல்ல, சப்ரகமுவ பிரதேசங்கள், ஏழுகோரளைப் பகுதிகள் போன்ற கொழும்புக்கு அருகே இருந்த பகுதிகளிலும் சிலாபம், பாகம, நாரங்கொட, தம்மன்கடுவ, நீர்கொழும்பு, கல்கமுவ போன்ற கத்தோலிக்கர் அதிகமாக வாழ்ந்த பகுதிகளிலும் பணிபுரிந்தார்.

ஒருமுறை மலிபன் வீதியில் ஒல்லாந்தருடைய கைகளிலிருந்து தப்புவதற்காக புனிதர் மறைந்திருந்ததாக கருதப்படும் இடம் இன்றும் அப்பகுதி மக்களால் அடையாளம் காட்டப்படுகிறது. அதேவேளை மேற்கு மற்றும் தெற்குப்பகுதிகளில் புனிதர் பயணித்த பல இடங்களின் பெயர்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக புனிதரால் அவரத கடிதங்களிலோ, அறிக்கைகளிலோ குறிப்பிடப்படவில்லை. இதனால் அவர் பணிபுரிந்த பல ஊர்களில் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட முடியாத பல வாய்மொழிப் பாரம்பரியங்கள் மட்டுமே இன்று காணப்படுகின்றன.

### 7. கண்டியிலிருந்து வன்னி ஊடாக யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி இராச்சியத்திற்கு சென்றிருந்தாலும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் புனிதர் யாழ்ப்பாணத்தையும் அருகிலிருந்த இரணைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, அளம்பில், கொட்டாஞ்சேல் போன்ற பிரதேசங்களையும் தரிசிக்கத் தவறவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு, அளம்பில், தென்னமரவாடி ஊடாக திருகோணமலை மாவட்டத்திற்கு வந்தார். அங்கிருந்து தாண்டவன்வெளி, மட்டக்களப்பு, சொறிக்கல்முனை, சம்மாந்துறை ஆகிய இடங்களையும் நாட்டின் உட்புறமாக அமைந்திருந்த தோறகமுனே, தமன்காடு, நாரங்கொட ஆகிய இடங்கள் ஊடாக வஹக்கோட்டை, மாத்தளை, கிறிஒறுவ போன்ற பகுதிகளையும் தரிசித்து அங்கிருந்து கண்டி சென்றார்.

### 8.. கண்டியில் இருந்து திருகோணமலை (கொட்டியாரம்)

கண்டியிலிருந்து தூய யோசேப் வாஸ் கொட்டியாரம் நோக்கி ஆரம்பித்த பயணம் காட்டுப் பாதைகள், மலைகள், ஆறுகள், சேற்றுநிலங்கள் தாண்டிய கடுமையான பயணமாக அமைந்தது. மகாவலி கங்கையை குறைந்தது மூன்று முறையாவது அவர் கடக்க வேண்டி நேர்ந்தது. இப்பயணங்களில் வேதத்தீவு கொட்டியாரத்துக்கான நுழைவாயிலாக இருந்தது. வேதத்தீவிலிருந்து மகாவலி கங்கையின் ஒரு கிளையினை கடந்து அவர் கொட்டியாரத்தை அடைந்தார். இந்த கிளையாறு வண்ணான்குழி எனும் இடத்திற்கு அருகே ஆழம் குறைந்ததாக இருந்ததால் இந்த இடத்திலேயே அவர் ஆற்றைக் கடந்ததாக நம்பப்படுகிறது. வேதத்தீவிற்கு இப்பெயரை தூய யோசேப் வாஸ் சூட்டினார் என்பது பாரம்பரியமாக கூறப்படுகிறது. முதலைகள் வாழும் இப்பகுதியில் நச்சுப் பாம்புகளும், யானை போன்ற பெரிய விலங்குகளும் வாழ்கின்றன. எனினும் இறைபராமரிப்பினால் பல தடவைகள் புனிதர் இப்பாதையில் பயணித்திருக்கிறார்.

### 9. கொட்டியாரத்திலிருந்து மட்டக்களப்பு

கொட்டியாரத்திலிருந்து மட்டக்களப்பிற்கு புனிதர் சென்ற பாதை தெளிவாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனினும் இன்று திருகோணமலையிலிருந்து மூதூர் ஊடாக மட்டக்களப்ப செல்லம் பாதையை அக்காலத்திலும் மக்கள் பிரதான பாதையாக பயன்படுத்தியதால் புனிதர் இப்பாதையிலேயே பயணித்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. இப்பாதையில் அக்காலத்தில் அதிகளவு ஒல்லாந்தர் நடமாட்டம் இருக்கவில்லை. எனவே இது சாத்தியமான பாதையாக இருந்துள்ளது.

### 10. அளம்பிலிலிருந்து கொட்டியாரம்

வடபகுதியிலிருந்து முல்லைத்தீவு ஊடாக புனிதர் நடந்த பாதை அளம்பில் வரை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் திருகே~ாணமலை மாவட்டத்தில் அவர் பயணித்த பாதை தெளிவாக இல்லை. எனினும் திரியாய், வெல்வெரி ஊடான காட்டுப்பாதை ஊடாக கொட்டியாரத்துக்கு அவர் சென்றதாக நம்பப்படுகிறது. அக்காலத்தில் வெல்வெரி, தம்பலகாமம் பகுதிகளில் வசித்த கத்தோலிக்கரை புனிதர் தரிசித்து திருவருட்சாதனங்களை வழங்கி இறுதியாக கொட்டியாரம் சென்றிருக்கிறார். இன்று இக்காட்டுப் பாதையின் ஒருபகுதி தார் வீதிகளின் வருகையால் மறைந்துவிட்டது.

போர்த்துக்கேயர் - ஒல்லாந்தர் கைப்பற்றிய இந்திய, இலங்கையின் பகுதிகள்






ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பனியின் உத்தியோகபூர்வ சின்னம்

### 13. புனிதரின் இறுதிப்பயணம்

கொட்டியாரத்தில் நோய்வாய்ப்பட்டுக் கண்டிக்குக் கொண்டுவரப்பட்ட புனிதர் ஓரளவு குணமா~னதும் அவசர நிலையில் இருந்த ஒரு நோயாளிக்குத் திருவருட்சாதனங்களை வழங்க சென்ற போது தவறி விழுந்ததால் நடக்க முடியாத நிலைக்கு ஆளானார். படுக்கையிலே இருந்து துன்பப்பட்டு மரணமானார். இப்பயணமே அவரது இறுதிப்பயணமாகக் கருதப்படுகின்றது.



- தூய யோசேப் வாஸ் கொட்டியாரத்திலிருந்து கண்டி சென்ற கடைசிப் பயணம் தவிர வேறு எந்தப்பயணத்திலும் எந்த ஒரு மிருகத்தையோ, வாகனத்தையோ பயன்படுத்தவில்லை.
- இறுதிப் பயணத்தின் போது கொட்டியாரத்திலருந்து அவரை சிவிகை ஒன்றில் அமர்த்தி மக்கள் கண்டிக்கு சுமந்து சென்றனர்.
- பல தடவைகள் யாழ்ப்பாணத்தின் தீவுப்பகுதிகளுக்குப் படகிலும், கண்டியில் ஆற்றைக்கடக்கும் போது சிறு தோணிகளிலும், ஏனைய சந்தர்ப்பங்களில் கால்நடையாக ஆறுகளைக் கடந்தும் பயணித்தார்.
- மாட்டு வண்டில், குதிரை, யானை, பல்லக்கு போன்றவை உயர் குலத்தவர், அரச பணியிலுள்ளோர் மற்றும் அரச குடும்பத்தவர் மட்டுமே பயன்படுத்துவது அக்கால வழக்கமாக இருந்தது.
- தூய யோசேப் வாஸ் இலங்கையில் மறைபணிக்காக கால்நடையாக நடந்த தூரத்தை இதுவரை இலங்கையில் மறைபணி புரிந்த வேறெந்தக் குருவும் நடக்கவில்லை என்று நம்பப்படுகின்றது.

**இலங்கையின் திருத்தூதரான தூய யோசேப் வாஸ் முனிவரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!**

**அருட்பணி. எஸ். ஆர். ஜெயரெட்ணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்பார்ப்பு..... அருட்பணி N.C அருள்வரதன்

எங்கும் எதிலுமே
கலகங்கள் நேரிட
அமைதியைக் காண்பது
அரிதாகிப்போகிறதே.

உரிமைகள் மறைந்து
கடமைகள் இழந்து
நியாயத்தைக் கேட்போர்
கேட்பதில் தவறில்லையே
மறுக்கப்பட்ட உரிமைகளாலே
மனதினை வதைக்கும்
போராட்டங்கள்
எங்குமே சிதறிப்பரவுவதை
கண்டும் காணாமல் இருக்கலாமா?

படித்த மாணவரின்
போராட்டங்கள்
பதவிகளைப் பெறவும்
நியாயமுண்டே
கற்றுமுடித்த நிலைகளாலே
தொழில்களைப் பெற
வாய்ப்பில்லை என்றால்
கற்ற நிலைகளால்
கண்ட பலன்தான் என்ன

கஷ்டங்கள் கடினங்கள்
வறுமைகள் இன்னும்
எத்தனையோ சவால்களை
எதிர்கொண்டு வந்தவர்கள்
இன்று
வீதிகளில் இறங்கி
வேலைகளைக் கேட்பதென்றால்
வேதனைகள் பெரிதல்லவா

நீதியினை வேண்டி நிற்போர்
நீதியினைக் கண்டடைய
ஆளுந்தரப்பினர்
அலட்சியாய் நின்றிடாமல்
நல்லவைகள் விளைந்திடவே
நலமுடனே செயற்பட்டு
நாட்டின் வளம் பெருக
நல்லவைகள் தரவேண்டுமே



**முதூர் பங்கின் முதல் குருவும், மண்ணின் மைந்தனும்**
**குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழா நாயகன்**
**அருட்தந்தை நிக்கலஸ் கிறிஸ்டியன் அருள்வரதன்**
**16.09.2017 – 16.09.2017**

**செப்டெம்பர் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மூதூரின் முதற்குருவான அருட்தந்தை அருள்வரதன் அவர்களின் குருத்துவ வாழ்வின் வெள்ளிவிழாத் திருப்பலி மூதூர் தூய அந்தோனியார் ஆலயத்தில் மாலை 5.00 மணிக்கு இடம்பெறும். அதனைத்தொடர்ந்து அவருக்கான வைபவ நிகழ்வும் இடம்பெறும். எனவே அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**தகவல் : மூதூர் பங்குச் சமூகத்தினர்.**

## குடும்ப அப்போஸ்தலத்துவம்



### குடும்ப செபம்

### கோடி நன்மை தரும்

'செபம் என்பது கிறிஸ்தவராகிய எமக்கு பலம் கொண்ட ஆயுதமாக அமைவது போல, அதுவே பெரும் ஆசீர்வாதமும் ஆகிவிடுகிறது. செபம், தபம், ஒறுத்தல் முதலான விழுமியப்பண்புகளில் செபமே முதன்மையான இடத்தை வகிக்கிறது. எமது மகிழ்ச்சியை, வெற்றியை ஏனையவர்களிடம் மிக இலகுவில் பகிர்ந்து கொள்ளலாம். ஆனால் எமது உள்ளக்கிடக்கைகள், தேவைகள், வேண்டுதல்களை உரிமையுடன் அறியக்கூடிய ஒரே ஒரு தனிப்பெரும் தலைவர், எம் வேதனை துன்பங்களில் எம்மைக் கைதூக்கி நாம் வளமோடு வாழ வழிகாட்டுபவர் எம் தந்தையாம் ஆண்டவரே. அவருக்கும் ~ எமக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்தி வைக்கக் கூடிய ஒரேயொரு கருவி செபமாகும்.

தனிச்செபத்தை விட குடும்ப செபத்திற்கு வல்லமை அதிகம் என்பார்கள். குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை, கலைகளின் பிறப்பிடம், இன்பத்தை, அன்பை, பரிவை, விட்டுக்கொடுப்பைக் கற்றுத்தரும் இடம். இவற்றுடன் இணைந்து ஆன்மீக தேடலுக்கு வழிகோலும் செபத்தை செபிப்பதைக் கற்றுக் கொடுக்கும் இடமாகவும் கூட குடும்பம் அமைந்து விடுகின்றது. 'செபிக்கும் குடும்பம் சிதறியாது' என்பார்கள். செபத்தின் அருமை பற்றி தூய கிறிஸ்தோத்தம் அருளப்பர் 'செபிக்கத் தெரியாத மனிதனுக்கு வாழத்தெரியாது' என்பதை வலியுறுத்தியுள்ளார். திருத்தூதரான தூய பவுல் கூட ' அவரை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர், அளவற்ற நலன்களைப் பொழிவார் என உரோமைய மக்களுக்கு கூறுகின்றார்.

குடும்ப செபம் குடும்ப வாழ்வுக்கு கோடி நன்மையாகவும் மாபெரும் வரப்பிரசாதமாகவும் அமையும்.

**குடும்பமாக செபித்தால்**
**எம்மை நாடி வருபவை**
ஆண்டவரின் பாதகாப்பு
ஆண்டவரின் வழிகாட்டல்
ஆண்டவரின் ஆசீர்வாதம்
வாழ்நாளில் மனஅமைதி
பாவவாழ்வில் மன்னிப்பு
பாதைகளில் வெற்றி

**குடும்ப செபத்தை மறந்தால்**
**நாம் இழந்து கொள்பவை**
ஆண்டவரின் ஆலோசனை இல்லை
ஆண்டவரின் பாதுகாப்பு இல்லை
ஆண்டவரின் ஆசீர்வாதம் இல்லை
ஆண்டவரின் மன்னிப்பு இல்லை
ஆண்டவரின் வல்லமை இல்லை

எனவே சிந்திப்போம் ! குடும்பமாய் கூடி செபித்து நாடி வருபவற்றைப் பெற்றுக் கொள்வதா? அல்லது குடும்ப செபத்தை மறந்து அழியாத ஆன்மாவிற்குரிய சொத்துக்களை இழந்து விடுவதா?

'செபித்து வாழ வேண்டும்
பிறர் செபத்தை நம்பியல்ல
நிலைத்து வாழ வேண்டும்
தினம் குடும்ப செபத்தில் ஒன்றாய்'

திருமதி சிந்துஜா லெப்பன்
குடும்ப வாழ்வுப் பணிகள்




# தூய மத்தேயு ஆண்டு



## நோன்பிருத்தல்

❖ **நோன்பு இருப்பது என்பது:**

- உணவை விட இன்னொரு விடயத்தில் முழுக் கவனத்தையும் செலுத்துவதாகும்.
- நோன்பு என்பது உணவு உண்பதைத் தவிர்ப்பது மட்டுமல்ல, உணவைத் தவிர்த்து அதைவிட மேலான இறைவனோடு இணைந்திருப்பதாகும். இது செபத்தையும் வேண்டுதல்களையும் உள்ளடக்குகின்றது.
- 1. யூதர் நோன்பு இருந்தனர்.
  2. இயேசு நோன்பு இருந்தார் சீடர்களுக்கும் கற்றுக் கொடுத்தார் (மத் 4:2)
  3. தொடக்கத்திருச்சபைக் கிறிஸ்தவர்களும் நோன்பு இருந்தனர் (மத் 17:21, லூக் 2:37, தி.ப 10:30, 13:3, 14:23, 1 கொரி 7:5).
- நோன்பு இருப்பதால் நன்மைகள் பல
- தவறான நோக்கத்தோடும் நோன்பிருக்கலாம்.



**2.சரியான முறையில் நோன்பிருத்தல்**

- நோன்பிருத்தல் என்பது எமது கடமை. "நீங்கள் நோன்பு இருக்கும்போது....."என்பதன் மூலம் சீடர்கள் நோன்பிருக்க வேண்டும் என இயேசு எதிர்பார்க்கின்றார்.
- நோன்பிருத்தல் அடுத்தவர் அறியாமல் செய்யப்பட வேண்டிய ஒன்று.
- ஒருவர் மனிதர் முன்பாக அல்ல,கடவுள் முன்பாகவே நோன்பு இருக்க வேண்டும்.
- சரியானமுறையில் நோன்பிருந்தால் கடவுளிடமிருந்து கைம்மாறு கிடைப்பது உறுதி. மனிதர் தரும் மதிப்பை விட இது பெறுமதி வாய்ந்தது.

**1.தவறான நோக்கத்தோடு நோன்பிருத்தல்:**

- கடவுள் முன்பாகவும் அடுத்தவர் முன்னிலையிலும் நன்மதிப்பை பெற...
- சமயக் கடமையை நிறைவேற்றும் ஒரே நோக்கத்துடன்...
- இயேசு நோன்பிருப்பதை எதிர்க்கவில்லை. ஆனால் கடவுளை அடையவே நோன்பிருக்க வேண்டும் என்றார் (மத் 6:18).
- நன்மதிப்புப் பெற நோன்பிருப்பது தவறு.
- கைம்மாறு எதிர்பார்த்து நோன்பிருத்தலும் தவறு.



**நோன்பிருந்தோர்**

- இயேசு (மத் 4:2)
- திருத்தூதர் (மத் 9: 15)
- அன்னா (லூக் 2:37)
- கொர்னேலியஸ் (தி.ப10:30)
- திருச்சபைத் தலைவர்கள் (தி.ப 14:23)
- தூய பவுல் (2 கொரி 6:5, 11:27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடுகளிலும் வாழ்க்கையிலும் தூய மரியா

அன்னை மரியா கிறிஸ்துவோடு நெருங்கிய தொடர்புடையவர் என்ற காரணத்தால் கத்தோலிக்க வழிபாடுகளில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. கி.பி. 431இல் நிகழ்ந்தேறிய எபேசு சங்கத்திற்குப் பின் மரியா இறைவனின் அன்னையாக ஆழமான நம்பிக்கையோடும் அன்போடும் ஏற்றிப்போற்றப்பட்டார்.

இயேசுக்கிறிஸ்துவுக்கு பெருவிழாக்களை எடுத்து மகிமைப்படுத்திய தூய திருச்சபை, மாசில்லாமல் உற்பவித்த மரியாவுக்கும் திருவிழாக்களை, பெருவிழாக்களை எடுத்துப் பெருமைப்படுத்தியது. இயேசுவின் விண்ணேற்பு, பிறப்புக்கு பெருவிழா எடுத்தவர்கள் அன்னையின் பிறப்பு, விண்ணேற்புக்கென பெருவிழாக்களை எடுத்ததுடன், அன்னையின் தாய்மைக்கும் விழாவெடுத்துச் சிறப்பித்தனர்.

திருச்சபையின் வரலாற்றிலே அன்னை காட்சியளித்தது அநேக தடவைகள். அனைத்தும் திருச்சபை அன்னையில் கொண்ட நம்பிக்கையே. இவைகளும் திருவிழாக்களாக்கப்பட்டு, வழிபாடுகளில் வாஞ்சையுடன் பின்பற்றப்படுகின்றன.

ஆவணி 15ம் நாள் அன்னையின் விண்ணேற்பு, புரட்டாதி 8ஆம் நாள் தூய கன்னி மரியாவின் பிறப்பு, ஐப்பசி 7ஆம் நாள் தூய செபமாலைப் பெருவிழா என்று அந்த மூன்று மாதங்களும் கன்னி மாதங்களாக தேவதாயின் சிறப்பை எடுத்தியம்புகின்றன. செபமாலைத்தியானமும் அன்னையை மகிமைப்படுத்தும் பக்தி முயற்சியாகவேயுள்ளது. ரோசரி (செபமாலை) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ரோஜாக்களின் மகுடம் என்பதே அர்த்தம். ஒவ்வொரு முறையும் 'அருள் நிறைந்த மரியே...' என்று சொல்லும் போது, அது ஒரு ரோஜாவாக மாறுகிறது. முழுச்செபமாலையும் ரோஜாக்களின் கூட்டமாக மாறுகின்றது. இந்த ரோஜாக்களின் மகுடமாக மரிமாதா திகழ்கின்றார்.

கி.பி. 5ஆம் நூற்றாண்டிலிருந்து மரியாவின் விண்ணேற்பு வழிபாடுகளில் 'மரியாவின் நினைவு நாள்' என ஆகஸ்ட் 15ல் கொண்டாடப்பட்ட போதும், கி.பி. 6,7 ஆம் நூற்றாண்டுகளில் 'மரியா துயில் கொண்ட விழா' என்று கொண்டாடப்பட்டது. திருத்தந்தை முதலாம் அத்திரியான் (கி.பி. 772 ~ 795) 'துயில் கொண்ட' என்ற சொற்றொடரை 'விண்ணேற்றம் அடைந்த' என்று மாற்றியதால், 'மரியன்னையின் விண்ணேற்பு விழா' எனப்பெயர் பெற்றது.

63வது வயதில் இறந்ததாகப் பாரம்பரியம் கூறும் அன்னை மரியாவின் அடக்கம் நடந்து, 3 நாட்களுக்குப் பின் வந்த **தோமா,** திறந்து காட்டும்படி திருத்தூதரை வற்புறுத்தியமையால் கல்லறையைத் திறந்தனர். உயிரற்ற அன்னையின் உடல் அங்கில்லாமல், உடலைச்~ சுற்றியிருந்த பரிவட்டம் மட்டுமே அங்கிருந்தது. மாதா மரி ஆன்ம உடலோடு விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டதை உறுதி செய்தனர்.

'தாயே உம் திருமுகத்தை நான் பார்க்கவில்லையே' என தோமா மனம் நொந்து செபிக்க, அம்மா மாதா மோட்ச மகிமையுடன் அவருக்கு முதன்முதல் காட்சியளித்து, தன் நினைவுச் சின்னமாக தான் அணிந்திருந்த இடைக்கச்சைத் துகிலை வானிலிருந்து கீழே போட, அதை அவர் அரைக்கச்சையாக அணிந்ததுடன், அதைப் பயன்படுத்திப் பல புதுமைகள் செய்தாரெனப் பாரம்பரியம் சான்று பகர்கின்றது.

உலக மாந்தரின் மீட்புக்கு முதற்காரணமாக இருந்த மாசில்லாமல் உற்பவித்த தூய மரியாவை, இன்று கத்தோலிக்க விசுவாசிகள் மாபெரும் புனிதையாக ஏற்று வணக்கம் செலுத்தி வருகின்றனர். இன்று இவ்வையகமதிலே ஆண்டவர் இயேசுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்களை விட அன்னை மரிக்கே அதிகமாக இருப்பதன் மூலம் அவருக்கு அளிக்கப்பட்டுவரும் மதிப்பும், மரியாதையும் எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட அவர் ஆற்றிய அற்புதங்களை அனுபவித்தவர்கள் எண்ணிலடங்கா.. எப்படியும் வாழலாம் என்றவர்களை இப்படித்தான் வாழ வேண்டுமென்று மாற்றிய மங்கையவர். ஞானத்தின் இருப்பிடமான தேவ அன்னைக்கு பொதுக்காலம் இரண்டாம் பகுதியில் ஆலயங்கள் தோறும் எடுக்கும் திருவிழாக்கள் எத்தனை எத்தனை! அன்னையின் ஆசியைப்பெற அணிதிரண்டு செல்லும் அடியார்களைக் காணும்போது மக்களது வாழ்க்கையோடு அன்னை மரியா எவ்வாறு ஒன்றிணைந்துள்ளார் என்பது அறியத்தக்கது, அதிசயிக்கத்தக்கது.

மகிழ்ச்சியின் காரணமாக தேவதாயிடம் தேடி உதவி பெற்ற, மாபெரும் மகிழ்ச்சியைச் சுவைத்தவர்கள், அவருக்குச் சான்று பகர்வதுடன், அனுதினமும் வணக்கமும் செலுத்துகின்றனர். வழிபாடுகளிலும் வாழ்விலும் தூய மரியாவுக்கு முக்கியத்துவமளித்து வரும் திருச்சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன். பல்வேறு விவிலிய மேற்கோள்கள், எடுத்துக்காட்டுக்கள் மூலம் தேவதாய்க்கு எதிராக தேவையற்ற முரண்பட்ட கருத்துக்களை முன்வைப்பவர்களுக்குச் செவிசாய்க்காது, இறையாவியால் இயக்கப்படுபவர்களாக வாழ்வோமாக!

~ ஜெயவதனி மரியதாஸ்
செல்வநாயகபுரம்

## இளையோர் திறன் உயர........

*சென்ற இதழ் தொடர்ச்சி ........*

***பயிற்சியின் முயற்சி***

'தி டைவிங் பெல் அண்ட் தி டட்டர்ஃபிளை' என்ற நூல் உலகிலேயே அதிகமான பிரதிகள் விற்ற நூல் என்ற பெருமையுடையது. 1996இல் வெளிவந்த இந்த நூலின் ஆசிரி~ யர் ஜான் டோமினிக் பாபியை 'அதிசய எழுத்தாளர்' என்றே கூறுகின்றனர். ஏன் இந்தப் பெயரை இவர் பெற்றார் தெரியுமா?

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு இவருடைய கைகளும், கால்களும் செயலிழந்து விட்டன. வாயும் பேச வாய்ப்புத்தரவில்லை. இந்தச் சூழலில் தான் இவர் எழுத ஆரம்பித்துள்ளார். அவரை எழுத வைத்தது அவருடைய முயற்சி... விடாமுயற்சி... நொடிந்து போகாத பயிற்சி..... தன்னுடைய நெருங்கிய உதவியாளரிடம் வெறுமனே கண்களை அசைத்து ஒவ்வாரு எழுத்தாய்ச்சொல்லிச் சொல்லி, அவருக்குப் புரிய வைத்து, அதை எழுதச் சொல்லி இந்த வெற்றியைக் கண்டுள்ளார் இந்த எழுத்தாளர்.

'ஆற்றல்களுக்கு எல்லாம் அடிப்படையாக இருப்பது பயிற்சியேயன்றி வேறேதும் இல்லை' என்று கூறப்படுவதுண்டு. இந்தக் கூற்று இளையோருக்குத் தேவையான, சாத்தியமான கூற்றே! எப்போது உழைக்கப் பயிற்சி எடுக்க ஆரம்பிக்கிறோமோ, அப்போது தான் வாய்ப்புக்களை நாம் வசப்படுத்தத் தொடங்குகிறோம் எனப்பொருள்.

வாய்ப்புக்களைத் தூர எறிகிறபோது....... அந்த வாயப்பின் கனாகனத்தை அறியாத போது.....

நாம் வெற்றி என்ற புள்ளியில் இருந்து பின்னோக்கி எறியப்படுகிறோம். விதையைப் பிளந்து வெளிவரும் வேர் எவ்வளவு வீரியமாய்ப் பாய்ந்து அழுத்தமாய் மண்ணிற்குள் ஊடுருவிப் பாய்கிறதோ, அந்த அளவிற்கு அந்த மரத்தின் கிளைகள் பரந்து விரியும் என்பது இயற்கை உணர்த்தும் முயற்சிக்கான பாடம். முயற்சி, தேடல், பயிற்சி இம்மூன்றும் இல்லாத செயல் வெற்றிக்கான வழியை அடைவதற்குச் சாத்தியமே இல்லை என்கிறார்கள் அறிஞர்கள்.

'அதிகாலையில் ஆற்றில் மீன்பிடிக்கச் செல்லும் நோக்கோடு ஒருவன் விடியும் வரை ஆற்றங்கரையில் அமர்ந்து தண்ணீருக்குள் காலைச் செலுத்திக் காலை ஆட்டிக்கொண்டே பொழுதைப் போக்கினான். காலில் ஒரு சிறிய மூட்டை தட்டுப் பட்டது. அந்த மூட்டையைக் கையில் எடுத்து தொட்டுப் பார்க்க அதில் கற்கள் இருந்தன. கற்களை ஒவ்வொன்றாக ஆற்றில் வீசி எறிந்துகொண்டே பொழுதைப் போக்கினான். கடைசியாகக் கையில் ஒரே ஒரு கல் இருந்தபோது விடியற்காலை வெளிச்சத்தில் அந்தக்கல் மின்னியது. திகைத்துப் போய் அவன் அதைக் கூர்ந்து பார்த்த போதுதான் புரிந்தது அவன் இவ்வளவு நேரமாய் ஆற்றுக்குள் எறிந்த ஒவ்வொரு கற்களும் விலைமதிப்பில்லாத 'இரத்தினக் கற்கள்' என்று.

கவிக்கோ அப்துல் ரகுமான் தன் கவிதை ஒன்றில் இப்படிச் சொல்கிறார், 'நீ சிறிய விதைதான் ஆனால். உனக்குள் ஒழிந்திருக்கிறது ஒரு பிரமாண்டமான மரம்......

**தொடரும்..................**

# குடும்ப நற்பணிகள் ஆண்டு

தமது பாவத்தினால் மனிதன் கடவுளிடமிருந்து பிரிந்தது மனிதருக்குள் பல பிரிவுகளுக்குக் காரணமாக இருக்கிறது என்பதே உண்மை. கடவுளிடமிருந்து பிரிந்த நிலையை அளவுக்கதிகமான சிற்றின்ப ஆசை எனவும் கூறலாம்.

மனித நிலையை விவிலியம் விளக்கி விசுவாச பின்னணியில் அதை விளக்குகின்றது.

**1.** முதல் பிரிவு – ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்பட்ட பிரிவாகும். இருவரும் ஆடையின்றி இருந்ததை உணர்ந்தனர் ( தொநூ 3:10....). இது மனித உடலுக்கும் ஆன்மாவிற்கும் இடையேயிருந்த நல்லிணக்கத்தை குலைத்துள்ளது. இது அளவுக்கதிகமான சிற்றின்பத்திற்கும் ஆண் பெண்ணை அடிமைப்படுத்துகின்ற நிலைக்கும் இட்டுச்செல்லும் (தொ.நூ 3:16). இருவரும் ஒருவரையொருவர் குறை கூறிக்கொள்வர் (தொ.நூ 3:12). இது பொறாமை, வன்முறை மற்றும் திருமணத்திலும் குடும்பத்திலும் குழப்பங்களைக் கொண்டுவரும்.



**2.** இவ் விரோதப் போக்கு பெண்களையும் தாய்க்குலத்தையும் பெரிதும் பாதிக்கும். இவர்கள் தமது பிள்ளைகளை வலியோடு பொறுத்துக்கொள்ள வேண்டும் (தொ.நூ 3:16). இராக்கேல் தன் பிள்ளைகளுக்காக அழுதாள் (எரே 31:15,மத் 2:18). இவ்விரோதப் போக்கு மனித சமூகத்தை இயற்கையிலிருந்தும் உலகிலிருந்தும் பிரிக்கின்றது உலகம் இனிமேலும் அழகிய தோட்டமாகத் தெரிவதில்லை. உழைப்பு கடினமாகின்றது. வியர்வை சிந்தி உழைக்க வேண்டியுள்ளது (தொ.நூ 3:19).



**3.** குடும்பத்தினுள் விரோதப் போக்கு உருவாகின்றது. சகோதரர்களுக்குள் ஏற்படும் சண்டை கொலையில் முடிகின்றது (தொ.நூ 4:1 – 16). கணவன் மனைவிக்கிடையே துரோகம் இயேசுவின் மூதாதையர் பட்டியலையும் பாதிக்கின்றது. தாமார், உரியாவின் மனைவி சிறந்த உதாரணம் (மத் 1:3....).

**4.** எல்லாவற்றிற்கும் மேலாக மரணம், மரணத்தை வருவிக்கக்கூடிய அனைத்து தீமைகளும் பிரிவினையை ஏற்படுத்துகின்றன. (தொ.நூ 3:19,உரோ 5:12). இவை குடும்பங்களில் துன்பத்தையும் ஏற்படுத்துகின்றன.

துன்பத்தையும் கண்ணீரையும் கொண்டுவருகின்ற இப்பிரிவினைகள் இன்று மட்டுமல்ல தொடக்கத்திலிருந்தே நாம் காணும் விடயமா~ கும். திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுவதைப்போல திருச்சபை ஓர் களவைத்தியசாலை மட்டுமல்ல குடும்பமும் வைத்தியசாலையே. குடும்பம் கண்ணீரைத் துடைத்து, காயங்களை ஆற்றி, ஒப்புரவை உருவாக்கி அமைதியை ஏற்படுத்துகின்றது.

பல நிறைகுறைகளோடு இயேசுவின் மூதாதையர் வாழ்வு இருந்தாலும் இயேசு வந்துவிட்டார் என்பதே நல்லசெய்தி.

இன்று நாங்கள் அழிவின் வழிகாட்டிகளாக வாழாமல் நம்பிக்கையின் ஒளியாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் ஒரு சில வாழ்க்கைக் குறிப்புகள்

சென்ற இதழின் தொடர்ச்சி....

**42. தலவில புனித அன்னம்மாள் ஆலயம்**

வருடந்தோறும் இலட்சக் கணக்கான மக்கள் ஒன்று கூடும் இவ்வாலயமானது, இலங்கை நாட்டின் இரண்டாவது பாரிய வணக்கஸ்தலமாக உள்ளது. இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாலயத்தில் கல்லினால் நிறுவப்பட்டுள்ள மிக உன்னதமான திருச்சிலுவையானது தூய ஜோசேப்வாஸ் அடிகளாரின் மறைபரப்பு பணியை இன்றும் எமக்கு மௌனமாக எடுத்துரைக்கின்றது.

**43. ஏத்தாலை**

வாய்மொழி பாரம்பரியத்தின்படி தூய ஜோசேப்வாஸ் அடிகளார் கற்பிட்டியில் இருந்து திரும்பி வரும்போது, அவரின் தாகம் தணிக்க பயன்படுத்திய சிறியகுளம் ஒன்று ஏத்தாலை ஆலயத்துக்கு முன்பாக உள்ள களப்பு அருகில் இன்றும் காணப்படுகின்றது.

**44. கம்மலை**

தூய ஜோசேப்வாஸ் அடிகளாரின் பாதம் பட்ட இவ்விடமானது முன்னைய காலத்தில் துறை முகமாகவும் எல்லையில் அமைந்துள்ள நகராகவும் காணப்பட்டது. மலைநாட்டு ஒல்லாந்த பிரதேசத்தின் எல்லையில் அமைந்திருந்த இக்கிராமத்தில் கத்தோலிக்க எழுத்தாளர் பலர் வாழ்ந்திருந்தனர். வண. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் எழுத்தாக்கங்களின் கையெழுத்துப் பிரதிகள் பல இங்குதான் மீள் எழுத்தாக்கம் பெற்றன.

**45. போலவத்த**


அக்காலத்தில் மலையக இராச்சியத்துக்கு உரித்தான போலவத்த கிராமமானது, ஒறத்தோரியன் குருக்களின் பிரதான மறைபரப்பு மத்திய நிலையமாக காணப்பட்டதுடன், தூய ஜோசேப் வாஸ் அடிகளார் பாதம்பட்ட இடமாகவும் காணப்பட்டது. அதி. வண யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாருக்கு அரசன் ஸ்ரீ நரேந்திர சிங்கனால் குடியிருப்பதற்காக வழங்கப்பட்ட கிராமமாக இது காணப்படுகின்றது. கி.பி 1742 ஜூலை மாதம் 17ம் திகதி அதி வண. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் இறந்ததும், அவரை அடக்கம் செய்ததும் இத்தேவாலயத்திலேயாகும்.

**46. மகா கல்கமுவ**

கி.பி. 1690ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கையில் கால்பதித்த தூய ஜோசேப்வாஸ் அடிகளார் முக்கர் இன மக்களை அதிகமாக கொண்டிருந்த மகாகல்கமுவ பிரதேசத்திற்கு வருகை தந்திருந்தார். அக்காலத்து மக்களுக்கு சவாலாக இருந்த வனவிலங்குகளின் அச்சுறுத்தல், பாம்புகளின் தொல்லை இவற்றிலிருந்து மக்களை பாதுகாக்க மரத்துண்டுகள் இரண்டை ஒன்றாக இணைத்து சிலுவை ஒன்றை நிறுவினார். அத்துடன் மறைபரப்புக்காக இலங்கைக்கு வரும் எந்த ஒரு மறைபரப்பாளருக்கும், வன விலங்குகளின் அச்சுறுத்தலோ பாம்புகளின் தொல்லையோ இருக்கக் கூடாது என்று வேண்டி இச்சிலுவையை மாபெரும் ஆசிர்வாதத்தின் சின்னமாக வைத்தார். அன்றிலிருந்து இன்றுவரை வனவிலங்குகளின் அச்சுறுத்தலுக்கோ மற்றும் பாம்புகளின் தொல்லைகளுக்கோ எந்த ஒரு மறை பரப்பாளரும் உள்ளாகவில்லை என்பது வரலாற்று சான்றாக உள்ளது. இத்தேவாலயம் குருநாகல் மறைமாவட்டத்தில் தூய ஜோசேப்வாஸ் அடிகளாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிரதான ஆலயமாக இலங்கையில் காணப்படுகின்றது.

**47. வாவுட**

அக்காலத்தில் கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த 2ம் விமலதர்ம சூரிய மன்னன் மலையக வாழ கத்தோலிக்க மக்களுக்கு சுதந்திரம் வழங்கியிருந்தார். போர்த்துக்கேய வியாபாரியான அந்தோனியோ சொட்டோவுடன் தூய ஜோசேப் வாஸ் அடிகளார் மலையகத்தை நோக்கிச் சென்ற போது 'போர்த்துக்கேய ஒற்றர்' என கருதி இவ்விடத்திலேயே அடிகளார் கைது செய்யப்பட்டிருந்தார்.



## மத்தேயு நற்செய்தி: ஓர் அறிமுகம்

மத்தேயு காட்டும் இறையரசு

தொடர்ச்சி ..............

இதை விளக்கும்போது அறிஞர்கள் கூறுவதாவது : மத்தேயு யூத கிறிஸ்தவர்களுக்கு எழுதினார். இறைவனை பெயர் சொல்லி அழைப்பது யூத பண்பல்ல. அதனால் இறைவன் உறையும் ' விண்ணகத்தை' குறித்து 'இறையரசு' என்பதை 'விண்ணரசு' என எழுதினார் என கூறுவர். இது நமது இலக்கியத்தில் காணப்படும் ஆகு பெயர் போன்றது.

**விண்ணரசு பறைசாற்றப்படுகிறது (மலைப்பொழிவு 5: 7)**

இயேசுவின் வாழ்வைப் பற்றிய தகவல்களில் மறுக்க முடியாத ஒரு உண்மை "இயேசு இறையரசை அறிவித்தார் என்பது தான்" என புல்ட்மான் எனும் விவிலிய அறிஞர் கூறுகிறார். இந்த இறையரசை தனதாக்கிக் கொண்டு இதில் அங்கம் வகிக்க விரும்புவோர் செய்ய வேண்டியது என்ன? அவர்களின் அறநெறி ∴ அருள்நெறி (Morality) எப்படி சிறந்திருக்க வேண்டும் என்பதையும் இந்த இறையரசுக்காக நாம் எவ்வாறு செபிக்க வேண்டும் என்பதையும் விளக்குவதே மலைப்பொழிவின் முக்கிய நோக்கம்.

இறையரசில் நுழைய விரும்புவோரின் அறநெறி தகுதிகள் மலைப்பொழிவின் துவக்கத்தில் காணப்படும் பேறுகள் (5:3~12), உப்பும் ஒளியும் (5: 13~16) மற்றும் திருச்சட்டம் நிறைவேற்றுதல் (5: 17~20) ஆகியவற்றில் கூறப்படுகின்றன. இவற்றின் இறுதியில் இயேசு, "மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியை விட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில் நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது" (5:20) என்கிறார். இச்சொற்றொடர் இதுவரை பேசப்பட்டதற்கு முற்றுப்புள்ளியாக அமைவதோடு இனிவரும் பகுதிகளுக்கு திறவுகோலாகவும் அமைகிறது. முதலாவதாக சீடர்களின் அறநெறி எப்படி சிறந்திருக்க வேண்டும் என விழைந்த இயேசு அதை அடுத்துவரும் பகுதிகளில் விளக்குகிறார். சீடரின் அறநெறி மறைநூல் அறிஞரின் அறநெறியிலிருந்தும் (5: 21~48) பரிசேயரின் அறநெறியிலிருந்தும் (6: 1~18) வேறுபடுத்தப்படுகின்றது. இறுதியாக இவ்விரு குழுவினருடன் ஒப்பிடாமல் சீடருக்கு அறிவுரை கொடுக்கப்படுகிறது (6:19~7:27) இவ்வகையில் சீடர்கள் மேற்குறிப்பிட்டவரிடமிருந்து சிறந்திருக்க முடியும், அதனால் விண்ணரசுக்குள் புக முடியும் என சொல்லாமல் சொல்கிறார்.

இரண்டாவதாக இறையரசுக்காக எப்படி செபிப்பது என்பதற்கு மாதிரியாக "நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்" (6:9) என்று சொல்லி "விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே" எனும் செபத்தை (6:9ஆ~13) தந்துள்ளார். இங்கு வெளிப்படையாக "உமது ஆட்சி வருக" (6:10) என இறையரசின் வருகைக்காக செபிக்கவும் பணிக்கிறார். எனவே, இச்செபம் எல்லா செபங்களுக்கும் மாதிரியாக அமைவதோடு அவர் பணியின் சாராம்சத்தையும் கொண்டுள்ளது.

இயேசுவின் போதனைப்படி " இறையரசு நெருங்கி வந்துவிட்டது" (மத் 4:17 ) 'உமது ஆட்சி வருக' என செபிக்கும் போது உண்மையில் நாம் இந்த இறையரசின் நிறைவருகைக்காக, நிறைவுக்காக செபிக்கிறோம். அதாவது இவ்வுலகில் இறையாட்சி முழுமையாக நிறுவப்பட வேண்டும் என்பதற்காக, நிறைவுக்காக செபிக்கிறோம். இதனால் ஏற்கனவே இறையரசு ஓரளவுக்கு இவ்வுலகில் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வதோடு, இது இன்னும் முழுமை பெறாமல் உள்ளது (Already… Not yet) என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம்.

இறையரசு வருகைக்கான வேண்டலின் கருத்தையே அடுத்து வருகின்ற "உமது திருவுளம் …நிறைவேறுக' (6:10) எனும் மன்றாட்டு வேறுவிதமாக சொல்கிறது. ஏனெனில் இறையரசு, இறை திருவுளம், இவை இரண்டையும் பிரிப்பது அரிது. இதன் பொருள் யாதெனில் இறையரசு இங்கு வளர வேண்டும். விண்ணுலகை ஆளுகின்ற இறைவன் தன் எல்லா நலன்களோடு உலகில் ஆள வேண்டும். அவரது ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்பதாகும். தொடரும்................

நன்றி ~ விவிலிய விருந்து

## விவிலியத்தில் குடும்பம்

சென்ற இதழின் தொடர்ச்சி....




விவிலியம் காட்டும் விதிமுறை !

இரு வேறுபட்ட தனித்தனிப் பண்புகளைக் கொண்ட, எதிர்மாறான உடல் உறுப்புக்களைப் பெற்ற இருபாலார் ஒரே உடலாய் இருப்பது என்பது இயலாத ஒன்று. உடல் உறவிலே இருவரும் ஒன்றிணைந்தாலும் அது நொடிப்பொழுது மட்டுமே நீடிப்பது. ஆனால் அந்தக்கணப்பொழுதில் அவர்கள் தம் உடல், உடலைச் சார்ந்த பண்புகள், புறச்சூழல், அனைத்தையுமே மறக்கடிக்கக்கூடிய அளவுக்கு அவர்கள் இன்பநிலை எய்துகின்றனர். எனின். அதுவே அவர்களின் ஆன்மாக்கள் இரண்டும் ஒன்றோடு ஒன்று உறவாடுவதால் விளைகின்ற இன்பமே தவிர வேறு அல்ல. படைக்கப்பட்ட இந்த "ஜீவாத்மாக்கள்" ஒன்றிணைந்தாலே இத்தகு இன்பம் எனின், படைக்கப்பட்ட ஒவ்வொரு "ஜீவாத்மாவும்" தம்மைப் படைத்த "பரமாத்மாவோடு" இணைகின்றபோது, எத்துணை முடிவில்லா பேரின்பமாய் இருக்கும் என்பதை முன் சுவையாய் தருவதற்காகத்தான் கடவுள் இந்த ஆன்மீக ஒன்றிப்போடு நிகழும் உடல் ஒன்றிப்பில் ஒருவித இன்பநிலை அனுபவத்தைப் பொதிந்து வைத்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே தான் திருமண உறவை "திருமண மறைபொருள்" என்று திருஅவைப்போதனை கூறுகின்றது.

**3. திருமண மறைபொருள் இறைமறை பொருளையே பிரதிபலிப்பது**

"நான் ~ நீ" என தனித்திருந்த ஆதாம், ஏவாள் எனும் இருபாலர் இப்போது "நாஙும் நீயும் எனும் ஒன்றிப்புறவை" (Communion) அடைகின்றனர். இந்த நிலையை அவர்கள் அடைவதற்கு இறைவனே நடத்திய திருவிளையாடல் என்று கூட நாம் கூறலாம். இதுகாறும் தனித்திருந்த ஆதாம், இப்போது ஏவாளைக் கண்டதும், காதல் கவிதை பாடி, தன் தசையும் எலும்பும் என உணர்கிறான். இனி அவர்கள் நான் ~ நீ எனும் இரு நபர்கள் அல்லர். மாறாக "நீயும் ~ நானும்" எனும் ஒன்றிப்புறவுக்கு உட்பட்டவர்களானதால், அதிலிருந்து ஒரு "சமூக உறவு" பிறக்கிறது. அவர்கள் ஒருடலாய் இணைந்ததன் விளைவாய் குழந்தைப்பேற்றைப் பெறுவர். அக்குழந்தைப்பேற்றால் "கணவனும் மனைவியும்" என்ற நிலையையும் தாண்டி, புதுப் பொறுப்பைப் பெறுகின்ற நிலை உருவாகுகின்றது. அவர்கள் ஒருடல் ஆன ஒன்றிப்பறவு முழு நிறைவு அடைகிறது. இனி அது ஒரு சவாலாகவும் கடமையாகவும் ஆகிவிடுகிறது. அவர்களின் ஒன்றிப்புறவு உறுதிப்படுகிறது. வாழ்நாள் மட்டும் ஒருமனப்பட்டு, ஒருவர் ஒருவருக்காய் மட்டும் வாழாது, பிள்ளைகளுக்காகவும் தமது ஒன்றிப்புறவிலே நிலைத்து வாழ அழைக்கப்பெற்றவர்களாய் ஆகிவிடுகின்றனர்.

இந்த மும்முனை உறவைக் கூர்ந்து நோக்கின், இறை சமூகத்தின் இயல்பை வெளிப்படுத்துவதாகவே அமைகிறது என்பதை தூய திருத்தந்தை ஜான் பால் அவர்களே சுட்டிக்காட்டுகிறார் (காண். குடும்பங்களுக்கான திருமடல், எண். 7). ஆம் ! நாம் நம்பும் மூவொரு இறைவன், தனித்தனி ஆட்களாய் இருக்கின்றனர். எனினும் ஒருவரை ஒருவர் சார்ந்து கூட்டுறவோடு வாழ்கின்றனர். தனித்தனிப் பண்பகளைக் கொண்டவர்கள். ஆனால் ஒரே "இறைமை" இயல்பிலே பங்குபெற்றவர்கள். ஒருவர் இல்லாமல் மற்றவர் இல்லை. ஒருவரை ஒருவர் அன்பு செய்து, ஒருவரை ஒருவர் சார்ந்து, எப்போதுமே "நாம்" எனும் தெய்வீக ஒன்றிப்புறவிலே திளைப்பவர்கள். ஒருவரை ஒருவர் நிறைவாக்கம் செய்யும் பணிவிலும் நிலைத்து இருப்பவர்கள்.

இதே உறவையும், பணியையும் மனிதக்குடும்பம் பிரதிபலிக்க வேண்டும் எனும் கருத்தில் தான் இறைவன் ஆதிக்குடும்பத்தைப் படைத்தாரோ என்று எண்ணுவதற்கு தகுந்த இறையியல் சான்றுகள் உள. "நமது உருவிலும் சாயலிலும்" படைப்போம் என்று கூறப்படும் திருவாக்கு ஒன்றே போதும். மானுட குடும்பம் இறைச்சமூகத்தை வெளிப்படுத்தும் ஒரு ஒப்பற்ற அடையாளம்.

தொடரும்..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் வருடாந்த சிரமதானம்

திருகோணமலை மறை மாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினால் 23.07.2017 அன்று காலை அன்னைத் திரேசா வயோதிப இல்லத்தில் இயக்குனர். அருட்பணி. றொஹான் பேர்ணாட் தலைமையில் சிரமதானம் இடம்பெற்றது. மறை மாவட்டத்திலுள்ள பேராலயம் கடை, குவாடலூப்பே, பாலையூற்று, உவர்மலை, அன்புவளிபுரம், செல்வநாயகபுரம், நிலாவெளி, சாம்பல்தீவு, இறை இரக்கம் ஆகிய பங்குகளில் இருந்து 69 இளையோர் வருகை தந்திருந்தனர். சிரமதானத்தின் பின் சகோதரன் டெரிக், சகோதரன் ரொசாந்தன் ஆகியோரால் ஆன்மீக உரை வழங்கப்பட்டது. அன்னை திரேசா அருட்சகோதரிகளால் மதியபோசனம் பரிமாறப்பட்டதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தகவல்~ நோயல் ராஜா

புகைப்படம் 12ம் பக்கத்தில்....

## இறை அனுபவத்தின் ஓர் இனிய அழைப்பு

– கிறிஸ்டி முருகுப்பிள்ளை

தொடர்ச்சி ......

சிநேகாலயா..... ஆம். இதுதான் சாப்பாட்டறையின் பெயர். அருட்தந்தை அமலோரானந்தா சுவாமிகள் அந்த வளாகத்திலுள்ள அனைத்துக்கட்டிடங்களுக்கம் ஒவ்வோர் அற்புதமான பெயரை சூட்டியுள்ளார். சிநேகாலயாவின் உள்ளே சென்ற போது கை கழுவும் பேசின் ..... அதில் மூன்று நீர்க்குழாய்கள்.... சோப்..... துணி என்பன ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. நீர்க்குழாயைத் திறந்தால் மிகவும் குறைந்தளவு நீர்த்தாரை..... அதில் தான் கை கழுவிக் கொள்ள வேண்டும்..... நீரிலும் சிக்கனம்! உள்ளே சென்றால் வரிசை வரிசையான மேசைகள்.. ஒவ்வொரு மேசையிலும் ஆறு கதிரைகள்... மேசையின் நடுவில் நீர்க்குவளைகள், டம்ளர்கள், உப்பு, மிளகுத்தூள் டப்பாக்கள் என்பன இருந்தன. தோசை..... சாம்பார்....சட்னி...ஊறுகாய் (பெரிய போத்தலில் எப்போதும் இருக்கும்) பால்கோப்பி, பால் தேநீர் டம்ளர்கள்..... வரிசையில் வைக்கப்பட்டிருந்தன....

குண்டூசி விழுந்தால் கேட்குமளவுக்கு நிசப்தம். எவரும் ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளவேயில்லை. நாங்கள் நால்வரும் ஒருவரை ஒருவர் பார்த்து மெல்லிய புன்முறுவலைப் பகிர்ந்து கொண்டோம். அப்போது தான் சிநேகாலயாவுக்கு பொறுப்பான அருட்சகோதரி ' உங்களுக்கு தேவையானளவு உணவு உள்ளது...... போதுமான அளவை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள்.. உணவை வீணாக்க வேண்டாம்.' மெல்லியதாக சற்றக் கண்டிப்பான குரலில் கூறினார்.

கடைசி மேசையில் ஆறு போர் அமர்ந்த பின் தான் அடுத்த மேசைக்குப் போக வேண்டும்... அதிலும் ஒரு ஒழுங்கு. நாங்கள் உணவு உண்ட பின் ரீ குடித்தோம். அவர்கள் ரீ குடித்த பின் காலை உணவை உண்டனர். உணவை உண்ட பின் சத்தமில்லாமல் கதிரைகளை அடுக்கி பாத்திரம் கழுவ உள்ளே சென்றால் அங்கும் ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.... ஆறு எவர் சில்வர் சட்டிகளில் வெந்நீர் நிரப்பப்பட்டிருந்தது. பக்கத்தில் நீர்க்குழாய் இருந்தும் எவரும் அதை திறக்கவேயில்லை.

சாப்பிட்ட பிளேட்டில் எஞ்சிய மிளகாய் கறிவேப்பிலையை மட்டும் டஸ்பினுள் போட்டுவிட்டு முதலாவது நீரில் பிளேட்டைக் கழுவிய பின் விம் போட்டு தேய்த்து அடுத்த நீரில் கழுவி பின் நான்கு பாத்திரத்திலும் கழவிய பின் அடுத்திருந்த துணிகளால் நன்றாக துடைத்து அதற்குரியஇடத்தில் ஒழுங்காக கழுவி அடுக்க வேண்டம். ரீ கப், கரண்டியையும் இவ்வாறே செய்ய வேண்டும்.



வெளியே வந்து சற்ற மூச்சை விட்டுக் கொண்டோம்.... அப்போது தான் தமிழ் நாட்டு நண்பர்கள் எங்களிடம் வந்து நலன் விசாரித்தனர்...:. பல கேள்விகள்... பதில் சொல்ல முயற்சித்தோம்... சரியாக எட்டு முப்பதுக்கு மணியடித்தது. அனைவரும் வேகமாக 'பிரம்ம வித்யா' எனப் பெயர் குறிக்கப்பட்ட கட்டிடத்தின் அமலோர் மண்டபம்' நோக்கி முதலாம் மாடிக்கு ஏறினோம். ஏனைய கட்டிடங்களுக்கும் அருட்தந்தை அமலோரானந்தா சுவா~மிகள் தானே பெயர் சூட்டினார். ஆனால் அவர் 1990 இல் ஒரு கார் விபத்தில் இறைவனடி சேர்ந்த பின் அவர் நினைவாக அமலோர் மண்டபம் எனப் பின்னர் பெயரிட்டுள்ளனர். பூவும் பொட்டும் தந்து உள்ளே வரவேற்றனர். உள்ளே சென்றோம் விசாலமான மண்டபம். மண்டபத்தின் பின்னால் உயிர்த்த இயேசுவின் சுரூபம். காவி நிறத்தில் ஒற்றைத்துண்டைத் தரித்தவாறு அமைக்கப்பட்டிருந்தது. சற்று வித்தியாசமாக உணர்ந்தேன். இயேசு பிற இனத்தாருக்கும் உரிய ஆண்டவர் என்பதால் இந்தியக் கலாசாரத்தின் தியானிப்புக்கேற்ப காவியுடையில் சித்தரிக்கப்பட்டுள்ளார் என விளக்கம் தந்தனர்.



ஒரு பக்கச் சுவரில் இறையியல் அறிஞர், சுவாமி டீ.எஸ். அமலோரானந்தா அடிகளாரின் உருவப்படம் மாட்டப்பட்டிருந்தது. காவியுடையும் தாடியுமாக தீட்சண்யமான பார்வையுமுடைய உருவம். பார்க்கும் போது அவரது பார்வை எம்மை ஊடுருவியது. 'இந்தியக் கிறிஸ்தவ மறமலர்ச்சி இயக்கத்தின் தந்தை' என இவர் போற்றப்படுகிறார்.

இவரைப் பற்றி இந்தியக் கிறிஸ்தவ மறமலர்ச்சி இயக்கத்தின் பொதுச் செயலாளர் ஆ. கிறகரி அசோக் சுவாமி அவர்களின் ' புதிய விழி.... புதிய ஒளி....புதிய உலகம்' என்ற நூலில் ' ஆம்! இந்தியத்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வர் ~ உலகளாவிய திருச்சபையின் ஆன்மீகச்சுடர் ~ நற்குணமெனும் குன்றேறி நிற்கும் கொள்கைச் சான்றோன் ~ இறையியல் அறிவும் மறையியல் அறிவும் கொட்டும் ஞானநீர் வீழ்ச்சி ~ தூய கிறீஸ்தவ நெறியில் அவர் சிகரம் ~ சொற்பெருக்கிலும் அவர் இமயம் ~ சிந்தனையின் சிகரம் ~ கசடறக் கற்றவர் கற்றபின் அதற்கேற்ப நிற்பவர். அந்தளவுக்கு ஓர் உண்மைச் சிந்தனையாளனாக, அற்புதமான இறைவழிகாட்டியாக இவர் போற்றப்படுகிறார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவருடன் வாழ்ந்து இவரால் பயிற்றுவிக்கப்பட்டவர்களும் தான் 'இறையியலின் புதிய கண்ணோட்டத்தின் ஆழ, அகலக் கருத்தரங்கின் பயிற்றுவிப்பாளராகத் திகழ்ந்த எமக்குக் கிடைத்த பெரும் பேறாகும். அருட்தந்தை லூயிஸ் அடிகளார், அருட்தந்தை எக்ஸ். டீ செல்வராஜ் அடிகளார், திரு பொன் லோரன்ஸ். கலாநிதி ஜான் பொஸ்கோ, கலாநிதி பெர்ணத்தம்மா. மரிய மிக்கேல், திரு.ஈ. ஆரோக்கியசாமி. திரு. ஜான் ஜோசப் ஆகியோர் எவ்வித வேதனமும் பெறாமல் 'அந்த ஏழு நாட்களில்' எங்களை இறை அனுபவத்தில் ஆழப்படுத்த..... அகலப்படுத்த மிகவும் சிறப்பாகச் செயற்பட்டனர்.

அருட்பணி லூயிஸ் சுவாமி காவியுடையையே தரித்தவர். மைசூரில் 'அஞ்சலி' ஆசிரமத்தை நடத்தி வருகின்றார். அருட்பணி எக்ஸ் .டீ. செல்வராஜா அடிகளாரும் கைத்தறியிலான சுதேச உடை அணி அணிபவர். இவர் எமது ஆயர், மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்ஆகியோரின் குரு ஆவார். இவர்களுடன் தேசிய மறைக்கல்வி நடுநிலைய இயக்கனர் அருட்பணி சகாயநேசன் அவர்களும் இறை அனுபவத்தில் திளைக்க எங்களுடன் கூட வந்தார். திரு. மரிய மிக்கேல் ஐயாவின் மிகச் சிறந்த கணீரென்ற குரலிலான பஜனையுடன் கருத்தரங்கு ஆரம்பித்தது.

தொடரும்.......

## தூய யோசப்வாஸ் வாழ்வின் பாதையில் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி

சென்ற இதழ் தொடரச்சி .........

எனவே இவ்வாறான இருக்குருக்களையும் பற்றி ஒப்பிட்டு சில முக்கிய பண்புகளை நாம் ஆராய்வோம்.

**தூயவாழ்வு:**

யோசப்வாஸ் அவர்களின் தூய வாழ்வின் பின்னணியினை அவரின் குடும்பம் கொடுத்தது. குருத்துவக் கல்வியின் போது ஆழமான பக்தியும், பணியாற்றுவதில் கொண்டிருந்த ஆர்வமும், புண்ணிய வாழ்விலும் தளர்வை காணவில்லை. ஆரம்பகாலத்தில் இருந்த தம்மை முதன்மைபடுத்தாத வாழ்வின் பழக்கம், அவர் குருத்துவத்தை அணமித்துக் கொண்டிருக்கும் போது இன்னும் ஆழமாக வேருன்றியது. மரியன்னையின் மேல் அதீதபக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தார். 1677ல் "நான் மரியன்னையின் அடிமை" என எழுதப்பட்ட பத்திரம் ஓர் எடுத்துக்காட்டாகும். பல இடர்கள், இன்னல்கள் வந்தபோதும் இறைவன் நம்மை வழிநடத்துவார் என்ற அசையாநம்பிக்கை கொண்டிருந்தார்.

ஞானப்பிரகாசரின் அழைப்பும் பணிவாழ்வும் தூய வாழ்வுக்கான எடுத்துக்காட்டு. தூய வாழ்விற்கான வித்தினை இவரின் சிறிய தந்தை தம்பிமுத்துப்பிள்ளையின் வழிகாட்டலும் அறிவுரைகளும் கைகொடுத்தது என்பது ஓர் சான்று. "எல்லாவற்றையும் விட்டு என்னைப் பின் செல்" என்ற இயேசுவின் அழைப்பை ஏற்று தந்தை, சொந்தம், உத்தியோகம், பெரும் புகழையும் உதறிவிட்டு ஞானப்பிரகாசர் ஈசுனுக்கு திருஊழியம் புரியசித்தம் கொண்டார். தூய வாழ்வின் பாதையினை அன்னை மரியாளின் மகனாக அர்ப்பணித்து அமலமரிதியாகிகள் சபையில் தொடர்ந்தார். இவரின் மரியன்னை பக்தியின் ஓர் எடுத்துக்காட்டாக "அமலோற்பவ இராக்கினி தூதன்" எனும் இதழ் சான்றாக அமைகின்றது. செபமும் தவமும் தன் வாழ்வின் மையமெனக் கொண்டார். எவ்வகைதுன்பம் வந்தபோதும் இறைவனிடம் கொண்டிருந்தநம்பிக்கையை இழக்கவில்லை. "இறைவன் எனது நாட்களை மேலும் அதிகரித்திருக்கிறார் மானிப்பாயில் ஒரு நோயில் அடிபட்ட பின்புதான் எனக்கு அழைப்பு வரும்" என்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறுவதையும் நாம் அறிகின்றோம்.

**பணிவாழ்வு:**

தூய யோசப்வாஸ் அவர்கள் அல்லும் பகலும் அயராது இலங்கையின் பல இடங்களுக்குச் சென்று பணியாற்றினார். இலங்கையில் காணப்பட்ட ஒரே ஒரு குருவாக இருந்த இவர் திருப்பலி, திருவருட்சாதனங்களை நிறைவேற்றி மக்களின் விசுவாச வாழ்வினை உறுதிப்படுத்தினார். மக்களிடம் கனிவும் மனித நேயத்துடனும் செயற்பட்டார். ஆன்மாக்களின் புனிதத்துவத்தை பேணவும் அவர் பணியாற்றினார். அவரது பிரசங்கத்தினால் பலரும் ஈர்க்கப்பட்டு விசுவாசப் பாதையில் மாற்றத்தை மக்கள் உணர்ந்தனர். கனிவான வார்த்தைகளும், சாதி மத பேதமின்றிய தோழமையும் பணியில் ஊன்றிய சக்திகளே. மக்களின் கலாச்சாரத்தினை பேணி சமய பணிக்கென அவ் உத்திகளை பயன்படுத்திக்கொண்டார்.

ஞானப்பிரகாசரின் முன்னோடிகளாகதிகழ்ந்தவர்கள் தூய யோசப்வாஸ் மற்றும் யாக்கோமே கொன்சால்வேஸ் என்பவர்களே. ஏனெனில் அவர் குரு மாணவராய் இருந்தபோதே தூய யோசப்வாஸ் முனிவருடைய எண்ணமுடியாத புண்ணிய செயல்களைப் பற்றிவாசித்தார். ஞானப்பிரகாசர் பல ஊர்களுக்கும் சென்று போதித்து பச்சாத்தாபம் வழங்கி சிறப்பாக பல இந்துக்களை திருச்சபைக்குள் அழைத்து வந்தார். பல பாடசாலைகள், ஆலயங்களை நிறுவினார். மக்களுடன் ஒட்டி உறவாடிய முறையும் கண்டிப்புடன் கூடிய அன்பையும் காட்டிய முறைமையும் மக்களை கடவுள் பக்கம் அழைத்தது. சந்தியாப்பிள்ளை ஞானப்பிரகாசரைப் பற்றி கூறுகையில் "நீர் தாழ்த்தப்பட்டவர்களை எடே, எடி, வா, போ என்று கூப்பிடாமல் தம்பி, தங்கச்சி இங்கே வாரும் என்று அழைத்தால் ஆண்டவருக்கு அதீத பிரியமாயிருக்கும் என்று போதனை புகட்டிவிட்டார்" என்று கூறுகின்றார். இவரின் போதனையின் மற்றுமோர் உயரிய பணி கல்விப்பணி என்பதில் ஐயமில்லை.

**ஞானவீரம்:**

தூய யோசப்வாஸ் அடிகளார் பணியாற்ற ஒல்லாந்தரின் அச்சுறுத்தலின் மத்தியிலும் இலங்கைவந்தமையே ஒருவீரத்தன்மையின் அடையாளமாகும். கத்தோலிக்கரை காணும் முயற்சியில் கல்லெறி, சிறைப்பிடிப்பு, பட்டினி, நோய் என பல இன்னல்களிலும் பணியை தொடர்ந்தார். யாழ்ப்பாண தேசத்தில் பல சூழ்ச்சிகள் இவருக்கு எதிராக இருந்த போதும் பரமனின் பணியை கைவிடவில்லை......

அருட் சகோ. எமர்சன் றாகல்
மெய்யியல் பீடம்,தேசிய குருமடம்
கண்டி

தொடரும்..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைக்கல்வி கற்போம் - 26

01. தூய யோசேப் வாஸ் பிச்சைக்காரன் வேடம் பூண்டு இலங்கைக்கு எத்தனையாம் ஆண்டு வந்தார்?

**1686ம் ஆண்டு**

02. தூய யோசேப் வாஸ் ஒரு குருவானவர் என்பதை அறிந்த மக்களின் மனநிலை எவ்வாறிருந்தது?

**மகிழ்ச்சியாய் இருந்தது.**

03. ஏறக்குறைய ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் எத்தனை வருடங்களாக திருப்பலி, அருட்சாதனங்கள் பெறாமல் மக்கள் தவித்துக் கொண்டிருந்தனர்?

**30 வருடங்கள்**

4. யாழ்ப்பாணத்தில் இருந்த தூய யோசேப் வாசிற்கு ஆபத்து எனக்கருதிய மக்கள் அவரை எங்கே அனுப்பி வைத்தார்கள்?

**சில்லாலைக்கு**

05. கண்டியில் எந்த நோயால் அரசனும், மக்களும் பாதிக்கப்பட்டிருந்தனர்?

**வைசூரி நோயால்**

06. 'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கு, அவர் ஒருவருக்கே பணிசெய்' யார் யாருக்கு கூறியது?

**இயேசுவால் சாத்தானுக்கு**

07. எந்த இடங்களின் கடலோரமாய் கப்பர்நாகூம் அமைந்திருந்தது?

**செபலோன், நப்தலி**

08. இயேசு முதல் சீடர்களை எந்தக் கடலோரத்தில் அழைத்தார்?

**கலிலேயாக்கடலோரம்**

09. இயேசு அழைத்த முதல் சீடர்கள் யார்?

**பேதுரு என்னும் சீமோன் அவர் சகோதரரான**
**அந்திரேயா, யாக்கோபு, யோவான்**

10. இயேசு சீடர்களை அழைத்துக் கலிலேயா தொழுகைக் கூடங்களில் எதைப்பற்றி அறிவித்து வந்தார்?

**விண்ணரசைப் பற்றிய நற்செய்தி**

## ஹாய் குட்டிஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 32
## 1குறிப்பேடு 01~15 அதிகாரங்கள்

01. பென்யமினின் புதல்வர்கள் மொத்தம் எத்தனை பேர்?
விடை : ..............................................

02. இஸ்ரயேலர் யார் முன்பாக புறமுதுகு காட்டி ஓடினர்?
விடை : ..............................................

03. இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரின் பேழையைக் கொண்டு வரத் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டவர்கள் யார்? யார்?
விடை : ..............................................

04. கேடயத்தையும், வாளையும் ஏந்தி, வில்எய்து, போர்பயிற்சி பெற்ற வலிமை மிக்கோர் எத்தனை பேர் இருந்தனர்? (இலக்கத்தில் எழுதுக.)
விடை : ..............................................

05. யூதா புதல்வரில் கேடயமும், ஈட்டியும் தாங்கிப் போர்கோலம் பூண்டவர்கள் எத்தனை பேர்?
விடை : ..............................................

06. 'இதோ நாங்கள் உம் எலும்பும் சதையுமாய் இருக்கிறோம்' என்று யார் யாரிடம் கூறியது?
விடை : ..............................................

07. சந்திப்புக் கூடார நுழைவாயிலின் காவலராக இருந்தவர் யார்? அவர் யாருடைய மகன்?
விடை : ..............................................

08. ஆண்டவர் உசாவை அழித்த இடத்தின் பெயர் என்ன?
விடை : ..............................................

09. பெலிஸ்தியரின் படை எந்த இடத்தில் தொடங்கி எந்த இடம் வரை முறியடிக்கப்பட்டது?
விடை : ..............................................

10. தாவீது அரசர் எத்தனை ஆண்டுகள் எருசலேமில் ஆட்சி செலுத்தினார்?
விடை : ..............................................

முடிவுத்திகதி 25.09.2017

பெயர் : ..............................
முகவரி : ..............................
பங்கு : ..............................
தரம் : ..............................
முடிவுத்திகதி : 25.09.2017

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 25
## 1 கொரிந்தியர் அதி 10 – 13 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பு | ■ | ஞா | | | | | இ | | ■ |
| | ■ | | ■ | த | ■ | | ■ | | ஆ |
| | ப | | | | உ | | ■ | | |
| | | | | | | | த | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | ■ | ம | | | பா | | | |
| | ■ | அ | | | ■ | ■ | ■ | | ■ |
| | க | | | | | | ■ | ழு | ■ |

01. ஞா.......ம் நி........ந்த
02. மனச்சான்.........
03. தன்.......லம்
04. உட......ஒன்றே
05. பா......ட்டுகி......ன்
06. இறுமா.......பு
07.ஆன்மீ......உண.....
08. முடிக்கொ.....ள வேண்டும்
09. அ......வு
10. தலைசிற.....தது
11. ப......குபவர்
12.புதி.... உட....படி....கை
13. கண்......டிபி.....

பெயர் :..........................................
முகவரி :..........................................
பங்கு :..........................................

முடிவுத்திகதி : 25.09.2017

## மறைமாவட்ட விவிலிய அறிவுப்போட்டி – 2017 முடிவுகள்



தமிழ் பிரிவு
கனிஸ்ர பிரிவு (தரம் 6,7,8)
1ம் இடம் பாலையூற்று (அன்புவழிபுரம்) பங்கு
2ம் இடம் உவர்மலைப் பங்கு
3ம் இடம் குவாடலூப்பே பங்கு

சிரேஸ்ட பிரிவு (தரம் 9, 10, 11)
1ம் இடம் பாலையூற்று (அன்புவழிபுரம்) பங்கு
2ம் இடம் குவாடலூப்பே பங்கு / அலஸ்தோட்டப் பங்கு

சிங்களப்பிரிவு
கனிஸ்ர பிரிவு (தரம் 6,7,8)
1ம் இடம் கந்தளாய்ப் பங்கு
2ம் இடம் சீனன்குடா (ஆண்டாங்குளம்) பங்கு
3ம் இடம் பேராலயப்பங்கு

சிரேஸ்ட பிரிவு (தரம் 9, 10, 11)
1ம் இடம் பாலையூற்றுப் பங்கு
2ம் இடம் சீனன்குடாப் பங்கு / கந்தளாய்ப் பங்கு

**இப்போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றவர்கள் தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.**

ஹாய் குட்டிஸ்
திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 30
2 அரசர்கள் 01~ 12 அதிகாரங்கள்
விடைகள்



| | | | |
|---|---|---|---|
| 01. அகசியா | (01:02) | 07. கொடிய பஞ்சம் | (06:25) |
| 02. 12 (பன்னிரண்டு) | (03:01) | 08. யோராம் | (09.21) |
| 03. சிறுவர் ~ எலிசா | (02:23) | 09. 04 பேர் | (07:03) |
| 04. சிறிதளவு | (10:18) | 10. யோவாசு | (11:21) |
| 05. சூனேமுக்கு | (04:08) | 11.யோராமை | (08:28) |
| 06. தொழுநோயாளி | (05:01) | 12. அரசனுடைய கணக்கனும் தலைமைக்குருவும் | (12:10) |

**பங்குபற்றியவர்கள் ~ 76 பேர்**
**மிகச்சரியாக விடையளித்தோர் ~ 57 பேர்**

**பரிசுக்குரியவர்கள்**

| 1ம் பரிசு 500/- ரூபா | 2ம் பரிசு 300/- ரூபா | 3ம் பரிசு 200/- ரூபா |
|---|---|---|
| ஜே.றெபேக்கா | மை.வர்ஷியா | சு.சுவேக்கா |
| இருதயபுரம் | இல : 78, திருமாள் வீதி, | இல : 216/12 சுடரொளி வீதி |
| மூதூர் | திருகோணமலை | பாலையூற்று |

பாராட்டுக்குரியவர்கள்

01. ஆர். திசாணி - இருதயபுரம்
02. அ. கிரிசாளினி - இருதயபுரம்
03. எஸ் கீத்துஷா - இருதயபுரம்
04. எம். மனுஸ் - இருதயபுரம்
05. எம். ரக்சனா - இருதயபுரம்
06. எஸ். சண்ஷன் - இருதயபுரம்
07. பி. சசிகாந் - இருதயபுரம்
08. ப.விதுர்ஷினி - இருதயபுரம்
09. ச. தரோன்ஷன் - இருதயபுரம்
10. ஏ. கிளேயா - பாலையூற்று
11. லெ. டிவோனியா - பாலையூற்று
12. ஆன்வஜிரா. ஆர்.எப். - பேராலயம்
13. எம.சி.டினேஸ் மெலன் - மூதூர்
14. நி. சஜீவ்ஷாந் - இருதயபுரம்
15. சு.கௌசல்யா - பாலையூற்று
16. பி. ஜெக்குலின் - கன்னியா
17. எஸ் ஆரோன் - குவாடலூப்பே
18. சி. யதுஷன் - இருதயபுரம்
19. வி.டிலக்ஷன் - இருயதபுரம்
20. வ.டில்கானா - பாலையூற்று
21. பி. சனாலி பெர்னான்டோ - மூதூர்
22. ஜே. கொன்கிளேவியஸ் - பேராலயம்
23. வெ. ஆன்டிலக்ஷிதா - கும்புறுப்பிட்டி
24. கெ.கெனிஸ்ரா - இருதயபுரம்
25. கே. ரக்ஷயா - இருதயபுரம்
26. கே. அனிற்றா - இருதயபுரம்
27. கி. ஜெனிக்ஷயா - இலிங்கநகர்
28. ஜோ. அருஷியா - அன்புவழிபுரம்
29. எஸ். கயானி - அன்புவழிபுரம்
30. டானியாலா.ஆர்.எப். - பேராலயம்
31. நி. வினோலிட்டன் - இருதயபுரம்
32. எஸ். ஹம்சாலினி - இருதயபுரம்
33. அ. ஜீவகாந் - பாலையூற்று
34. அஜந்தினி - இருதயபுரம்
35. நி. கிதுஷாந் - இருதயபுரம்
36. ச. ஏஞ்சல் - பாலையூற்று
37. ஏ.நிதர்ஷன் - இருதயபுரம்
38. ஜே. ஆன்சாளினி - இருதயபுரம்
39. ஜே. ஹரிநாத் - இருதயபுரம்
40. இ. ஜெகசூரன் - பேராலயம்
41. நே. கெஷ்மியா - கும்புறுப்பிட்டி
42. பி. டிலக்ஷன் - தேற்றாதீவு
43. அ. சாளினி - இருதயபுரம்
44. வ. கிமசன்பெலிஸ் - இருதயபுரம்
45. ர.சாறிக்கா - இலிங்கநகர்
46. வி. ஜானதக்ஷன் - இருதயபுரம்
48. ச. பிலமியன் டேரியஸ் - பாலையூற்று
49. ர. டிசானி - இருதயபுரம்
50. அ. டிறோன் - உவர்மலை
51. வை. டிலுசாந்தினி - இருதயபுரம்
52. து. முகுந்தன் - இருதயபுரம்
53. ஜே. பிரதிக்ஷா - இருதயபுரம்
54. சரோனா ஆர். எப். - பேராலயம்

பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மறைமாவட்ட திருவிவிலிய வினாவிடைப் போட்டி - 2017
















## திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் கடந்த மாத நிகழ்வுகள்





## கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் வருடாந்த சிரமதானம்









## ஞானோதயம் - அக்குவானஸ் பல்கலைகல்லூரியுடன் இணைக்கப்பட்டது

## மறைமாவட்ட குடும்ப வாழ்வுப் பணியகத்தால் நடாத்தப்பட்ட குடும்ப மேம்பாட்டுக் கருத்தமர்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளே உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும் ( தி.பா : 51: 01)